பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்: 15 வள்ளுவர் ஆண்டு 2031 தை 03 திங்கட்கிழமை (17-01-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:44


## 'இன்ரநெற்றில்' உதயன்!

'உதயன்', 'சஞ்சீவி' பத்திரிகைகளில் பிரசுரமாகும் செய்திகள் மற்றும் தகவல்களை அன்றைய தினம் அதிகாலையிலேயே உலகின் எந்த மூலையில் இருந்தும் வாசிக்கக்கூடியதாக அவை 'இன்ரநெற்' மூலம் பிரசுரம் செய்யப்படவிருக்கின்றன.

இதற்கான பரீட்சார்த்த முயற்சிகள் தைப்பொங்கல் தினமான நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டன. பெப்ரவரி முதல்வாரத்தில் உத்தியோக பூர்வமாக இச்சேவை செயற்படத் தொடங்கும்.

உதயன் - சஞ்சீவியில் பிரசுரமாகும் முக்கிய செய்திகள், மரண அறிவித்தல்கள், கோயில் உற்சவங்கள், விழாக்கள் போன்றவை தொடர்பான செய்திகள் மற்றும் தகவல்கள், படங்கள் அனைத்தும் கட்டணம் ஏதுமின்றி சர்வதேச வலைப்பின்னல் வழியாக உதயன் இணையத்தில் தமிழ் மூலம் பிரசுரமாகும்.

உலகின் எந்த நாட்டில், எந்த மூலையில் உள்ளவரும் 'இன்ரநெற்' தொடர்பு மூலம் யாழ். செய்திகளை சுடச்சுட அறிந்துகொள்ளும் வாய்ப்பையும், நமது செய்திகள், அறிவித்தல்களை உலகில் உள்ள அனைத்துத் தமிழர்களுக்கும் தெரிவிக்கும் வசதியையும் ஏற்படுத்தித் தருவதில் உதயன் மகிழ்வடைகிறான்.

உதயன் இணையத்துடன் தொடர்பு ஏற்படுத்துவதற்கான 'இன்ரநெற்' முகவரி www.uthayan.com

மேலதிக தகவல்களைப் பெற ஈ-மெயில் முகவரி:- info@uthayan.com

-நிர்வாகம்-

# பொதுத் தேர்தலை நடத்தும் திகதி விரைவில் முடிவுசெய்யப்படும்

## ஜனாதிபதி தலைமையில் குழு நியமனம்

கொழும்பு,ஜன.17

பொதுத் தேர்தலை எப்போது நடத்துவது என்பது குறித்து ஜனாதிபதி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு விரைவில் முடிவு செய்யும் என பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற முன்னணியின் செயற்குழுக் கூட்டத்தில் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நாடாளுமன்ற ஆயுளை மேலும் இரு வருடங்களுக்கு அதிகரிக்கும் திட்டம் நிராகரிக்கப்பட்டுவிட்டது என்றும் -

ஜனாதிபதி தலைமையில் முன்னணியில் இடம்பெறும் கட்சிகளின் பிரதிநிதிகள் அங்கம் பெறும் குழு தேர்தல் நடத்துவது தொடர்பாக முடிவை எடுக்கும் என்றும் -

அதேசமயம் அரசுக்கு ஆதரவு வழங்க முன்வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உதவும் வகையில் கட்சித்தாவல் சட்டத் திருத்தத்தை விரைவில் கொண்டுவருவது என்றும் - மேலும் கூறப்பட்டது.

அதேநேரம் - கட்சித்தாவல் சட்டத்திருத்தம் தொடர்பான விவரங்கள் சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும்-

விரைவில் சட்டத்திருத்தம் சபாநாயகர் ஊடாக உயர்நீதிமன்றத்துக்கு அனுப்பப்படும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# ஐ.தே.கட்சி எம்.பிக்கள் பலர் விரைவில் அரசுடன் சேருவர்?

கொழும்பு,ஜன.17

ஐ.தே.க. எம்.பிக்கள் பலர் விரைவில் அரசுடன் இணைவர் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(முன்னாள் நிதிஅமைச்சர் றோனி டிமெல், அம்பாறை மாவட்ட எம்.பிகளான மேர்வின் டி சில்வா, பக்கீமன கலபதி, திருமலை மாவட்ட எம்.பி ஆரியரத்ன வல்பொலகம, இரத்தின புரி மாவட்ட எம்.பி சுஸந்த புஞ்சிநி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே அமைச்சர் விஜயத்துக்கு பௌத்த அமைப்புக்கள் எதிர்ப்பு!



சமாதான முயற்சிக்கே எதிர்ப் பென்றால் அப்ப சமாதானம் எட்டாக் கனிதான்.....!

## நகரில் சுவரொட்டிகள்

வங்கக்கடலில் காவியமான விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் 7ஆவது நினைவு தினமான நேற்று அவரை நினைவு கூர்ந்து சுவரொட்டிகள் யாழ். நகரில்

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலுள்ள தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்த முஸ்தீபு

கொழும்பு,ஜனவரி 17

**இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் இடையிலான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் நட் வொலிபெக்கின் இலங்கை விஜயத்திற்கு இலங்கையில் உள்ள பல பௌத்த அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.**

நோர்வே வெளிவிவகார அமைச்சர் இலங்கை வருவாரானால் கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக 40 பௌத்த அமைப்புக்கள் அங்கம் வகிக்கும் பௌத்த தேசிய கூட்டுக் கமிட்டி அறிவித்துள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டுப் பிரச்சினை என்றும்-

எந்த ஒரு வெளிநாடும் மத்தியஸ்தர் என்ற பெயரிலோ அல்லது ஏற்பாட்டாளர் என்ற பெயரிலோ தலையிட அனுமதிக்கப்போவதில்லை என்றும் - பௌத்த தேசிய கூட்டுக் கமிட்டியின் செயலாளர் பியசேன திஸநாயக்க தெரிவித்தார்.

தென்னாசிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் நேற்றுமுன்தினம் இலங்கைக்கு வர இருந்ததும்-

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சிகிச்சை பெறுவதற்காக ஐரோப்பிய நாடு ஒன்றுக்குச் சென்றதால் அவரின் விஜயம் பிற்போடப்பட்டிருந்ததும் - தெரிந்தவையே.

இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு விரைவில் அங்கு அவர் செல்வார் என்று நோர்வே அரசு கடந்த வாரம் அறிவித்திருந்தது. (இ-3)

## வத்தளையில் 52 பேர் கைது

கொழும்பு,ஜன.17

வத்தளைப் பகுதியை நேற்றுக் காலை முதல் திடீரெனச் சுற்றி வளைத்த படையினர் பலரை விசாரணைக்கு உட்படுத்தியதுடன் 52 பேரைத் தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளனர்.

கொழும்பு நகரப்பகுதியில் அண்மைக்காலமாகத் திடீரென மேற்கொள்ளப்பட்டுவரும் தேடுதல் காரணமாக விடுதலைப்புலிகளின் தற்கொலையாளிகள் வத்தளை போன்ற பகுதிகளில் மறைந்து வாழ்கின்றனர் என்ற வகையில் தமக்குத் தகவல் கிடைத்ததை அடுத்தே மேற்படி தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக வத்தளைப் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரேமலால் ரணகல தெரிவித்தார்.

(இ-7)

## கட்சித்தாவல் சட்டத்திருத்தம்: முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனை

கொழும்பு,ஜன.17

கட்சி தாவும் சட்டத்திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் சில நிபந்தனைகளை விதித்துள்ளது என்று கொழும்புச் செய்திவட்டாரங்கள் தெரிவித்தன.

கட்சிதாவும் சட்ட திருத்தத்துக்கு ஆதரவு வழங்கப்போவதில்லை என்று முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்திருந்த நிலையில் -

அந்தக் கட்சியின் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம்.அஷ்ரப்பு

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## விஜயரத்தினத்தின் பூதவுடல் திருமலைக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.17

• கடந்த வெள்ளிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட பருத்தித்துறை நகரசபைத்தலைவர் வ.விஜயரத்தினத்தின் பூதவுடல் அவரது சொந்த இடமான திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பருத்தித்துறை முதலாம் குறுக்கு வீதியில் உள்ள அவரது தற்காலிக இல்லத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த பூதவுடல் நேற்றுக் காலை நகரசபைக்கு எடுத்து வரப்பட்டது.

அங்கு வைக்கப்பட்ட பூதவுடலுக்கு புளொட் அமைப்பின் பிரமுகர்களும் பொதுமக்களும் அஞ்சலி செலுத்தினர்.

இதையடுத்து படையினரால் பொறுப்பேற்கப்பட்ட பூதவுடல் விமானம் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இன்று திருமலைக்கு எடுத்துச் செல்லப்படும் பூதவுடல் உறவினர்களிடம் கையளிக்கப்படவிருக்கின்றது. (இ-3-15-173)

## களுத்துறைச்சிறை தமிழ்க் கைதிகள் பதற்றத்துடனும் பீதியுடனும் வாழ்கின்றனர்

### அங்கு சென்றுதிரும்பிய சட்டத்தரணிகள் தகவல்

கொழும்பு,ஜன.17

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தொடர்ந்தும் பீதியுடனும் பதற்றத்துடனும் உள்ளனர் என்று அங்கு சென்று திரும்பிய சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை சட்டத்தரணி அருட்திரு யோகேஸ்வரன் சகிதம் சென்ற அவர் அங்குள்ளவர்களில் சுமார் 50 கைதிகளுடன் உரையாடினார்.

அங்குள்ள தற்போதைய நிலை குறித்து அவர் உதயனுக்கு தெரிவித்ததாவது:-

அண்மையில் அங்கு தாக்குதல் இடம்பெற்றமைக்குக் காரணமான சிறைக்காவலர்கள் தொடர்ந்து அங்கேயே பணிபுரிகின்றனர்.

இதன் காரணமாக அங்கு எந்நேரமும் தம்மீது தாக்குதல் இடம்பெறலாம் என்ற அச்ச நிலையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான உணவுப்பொருள் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை

### தற்பொழுது அனுப்பப்படுவது அதிகமாம்

கொழும்பு,ஜன.17

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு அனுப்பி வரும் உணவுப்பொருள்களின் அளவைக் குறைக்க திட்டமிடப்படுவதாக கொழும்புச் செய்திவட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அத்தியாவசியத் திணைக்களத்தினால் அந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு வரும் உணவுப் பொருள்களின் அளவு அதிகம் என படைத்தரப்பினர் அறிவுறுத்தியுள்ளனர் என்றும் -

இதன் காரணமாகவே உணவுப் பொருள்களின் அளவைக் குறைக்கத் திட்டமிடப்படுவதாகவும் - அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அதேசமயம் தற்சமயம் அனுப்பப்படும் உணவுப்பொருள்கள் போதாதுள்ள நிலையில் பொருள்களின் அளவைக் குறைப்பதனால் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கவேண்டி

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

ஏழாலை தெற்கு வசந்தபுரம்
ஸ்ரீ வசந்தநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
எட்டாம் திருவிழா 18 – 01 – 2000 செவ்வாய்

## ஆன்மீக உரை

நல்லை ஆதீன முதல்வர்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்.
மகேஸ்வர பூஜையும் இடம்பெறும்.

– உபயகாரர்கள்

(72752)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி அமராவதி சிவபாதசுந்தரம்

எமது கல்லூரி ஆசிரியையும், ஆசிரியை
றோ. பாலஸ்கந்தனின் சகோதரியுமாகிய
திருமதி அமராவதி சிவபாதசுந்தரம்
அவர்களின் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதோடு அன்னாரது ஆத்ம சாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், அலுவலக ஊழியர்கள்.
யாழ்/இந்து மகளிர் கல்லூரி

(72755)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 1959 — 10 — 17



ஆண்டவன் நிழலில் 1999 — 12 — 19

### திருமதி சிவகலா விக்னேஸ்வரன்
(சாந்தா)

திருமதி சிவகலா விக்னேஸ்வரன் அவர்கள் இறைபதம் எய்தியபோது எமக்கு உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (18 - 01 - 2000) செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
ஐ. விக்னேஸ்வரன் (கணவர்)
(இலங்கை மின்சாரசபை ஒப்பந்தகாரர்)
பெற்றோர், சகோதரர்.

பாலந்தோட்டம்,
வல்வெட்டி.

(72750)

## மரண அறிவித்தல்

### செல்லையா இராசதுரை

யாழ்ப்பாண மாநகரசபை ஓய்வுபெற்ற கிறாப்பர் செல்லையா இராசதுரை அவர்கள் 14 - 01 - 2000 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா — செல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும் பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி), கமலாதேவி ஆகியோரின் சகோதரரும் இராதாகிருஷ்ணன் (மருந்தாளர், ஓமான்), இந்திராணி, அன்னபூரணம் ஆகியோரின் மைத்துனரும் விஸ்வலிங்கத்தின் சகலனும் வளர்மதி, ரவீந்திரன் (பொறியியலாளர், கொழும்பு), சுரேந்திரன் (மருந்தாளர், வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வகுமாரன் (கிளை முகாமையாளர், நல்லூர் ப. நோ. கூ. சங்கம்), கார்த்திகாயினி ஆகியோரின் மாமனாரும் பவித்திரா, பகீரதி, பபிதா, கானப்பிரியன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-1-2000) திங்கள் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
இ. ரவீந்திரன் (மகன்)

20/14, தேவாலய வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
யாழ்ப்பாணம்.

(72758)

தற்போது நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக

# இடம்பெயர்ந்த ஆசிரியர் அருகிலுள்ள பாடசாலையில் கடமையாற்ற வசதி

யாழ்ப்பாணம், ஜன. 17

குடாநாட்டில் தற்போது நிலவும் யுத்த சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக இடம்பெயர்ந்திருக்கும் ஆசிரியர்கள் தமக்கு அருகிலுள்ள பாடசாலைகளில் பணியாற்றுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார்.

இவ்வாறு இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்கள் தாங்கள் முன்பு கடமைபுரிந்த வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தற்காலிக விடுவிப்புக்குரிய கடிதத்தைப் பெற்று தற்காலிகமாகக் குடியிருக்கும் கல்வி வலயங்களின் பணிப்பாளர்களைச் சந்திக்க வேண்டும் எனவும்.—

குறித்த கல்விப் பணிப்பாளர்கள் இவர்கள் தற்காலிகமாகக் கடமையாற்றுவதற்கான பாடசாலைகளை தெரிவிப்பர் எனவும் — அவர் அறிவித்துள்ளார்.

இவ்வாறு தற்காலிக இணைப்புப் பெறும் ஆசிரியர்கள் வேதனத்தை தம்து நிரந்தரப் பாடசாலையிலேயே பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

# ஜனாதிபதி வெளியிட்ட கருத்துக்கு பத்திரிகை ஆசிரியர் சங்கம் கண்டனம்

கொழும்பு, ஜன. 17

ஜனாதிபதி அண்மைக்காலமாக வெளியிட்டு வரும் கருத்துக்கள், விமர்சனங்கள் நல்லிணக்கத்துக்குப் பயன் தரக்கூடியவை அல்ல.

மேற்கண்டவாறு சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் பத்திரிகை ஆசிரியர் சங்கம் ஆகியவை தெரிவித்துள்ளன.

ஜனாதிபதியின் கருத்துத் தொடர்பாக அவை வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஜனவரி 3 ஆம் திகதி தொலைக்காட்சிக்கு அளித்த தனது நேர்காணலில் ஜனாதிபதி இந்த நாட்டின் சுதந்திர ஊடக இயக்கத்தை வன்மையாகக் கண்டித்திருந்தார்

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கும் அரசுக்கும் எதிராக இரண்டு பத்திரிகை ஆசிரியர்கள் சதித்திட்டம் தீட்டியதாக அரச ஊடகம் தனது தலைப்புச் செய்தியில் குற்றஞ்சாட்டியது.

எந்தவொரு விடயத்தையும் சுதந்திரமாக ஒருவருக்கொருவர் தடையின்றிப் பரிமாறிக் கொள்வதும், கருத்துக்களை வெளியிடுவதும், தமது வாசகர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய விஷயங்களை அறியத் தருவதுமே பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் நோக்கமாகும்.

ஒரு ஜனநாயக அமைப்பிலே இது அவர்களுடைய உரிமை ஆகும்.

1994 இல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டின் அதி உயர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட போது, அதுவரை சுவாசித்து வந்த அச்சம் நீங்கி புதுக்காற்றைச் சுவாசிக்கும் நிலை தோன்றியது.

அண்மையில் ஜனாதிபதியாக அவர் மீண்டும் தெரிவு

(9 ஆம் பக்கம் பார்க்க)

## மாதாந்தப் பரீட்சை-01

தரம் 2 – 6 வரை
20 - 01 - 2000
(போயா தினம்)
அன்று காலை 8.00 மணிக்கு நடைபெறும்.
Bond யாழ்.நகர்
(72754)


லிபேட்டி அச்சுவேலி

அர்ஜுன், பானுப்பிரியாவின்
கோகுலம்
காட்சிகள்: 10.30, 2.30
T P. 070-212223
070-212678
[72730]

ராஜா
யாழ்ப்பாணம்
அஜித் - சிம்ரன்
மற்றும் பலர் நடித்த
அவள் வருவாளா
10.30, 2.30
[சி/10649]

நாகம்ஸ்
சுன்னாகம்
சரத்குமார், தேவயானி
நடித்த
சூரிய வம்சம்
(ரீஸ்)
காட்சிகள்: 11.00, 2.30
(புதிய நேரம்)
[72710]


## நினைவகலா மூன்றாம் ஆண்டு

அமரர்

### அந்தோனிப்பிள்ளை சிறிசெல்வன்

(முன்னாள் ஊழியர், நீர் விநியோகப் பகுதி,
நீர்ப்பாசனத் திணைக்களம்)

கரைந்தது மூன்றாண்டு கனவுகள் போல்
கலையவில்லை உம் நினைவுகள் மனதினிலே!

நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இன்று (17–01–2000) திங்கட்கிழமை காலை 6–30 மணிக்கு அமரர் அந்தோனிப்பிள்ளை சிறிசெல்வன் அவர்களுடைய ஆத்ம இளைப்பாற்றுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். கா ல இல்லத்தில் நடைபெறும் செப வழிபாட்டிலும் கலந்து பிரார்த்திக்க அன்புடன் அழைக்கின்றோம்.


- சகோதரர்கள்

நாவாந்துறை.

(72762)

## அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு: 16 — 08 — 1912



உதிர்வு: 10 — 12 — 1999

### அமரர் கதிராமு நாகமுத்து
(மயிலு - அச்செழு)

இன்று (17 – 01 - 2000) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டி, சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அச்செழு வடக்கு,
நீர்வேலி.

N. குலசிங்கம் (இயந்திர இயக்குநர்)
இலங்கை மின்சாரசபை,
யாழ்ப்பாணம்.

(72757)

# தீவிரவாதிகளைகையளிக்க பாகிஸ்தானிய அரசு மறுப்பு!

## இந்தியாவின் கோரிக்கை நிராகரிப்பு

இஸ்லாமாபாத், ஜன. 17
இந்தியன் எயார் லைன்ஸ் விமானத்தைக் கடத்திய கடத்தல்காரர்களையும், சிறையில் இருந்து விடுவித்த தீவிரவாதிகள் மூவரையும் தன்னிடம் ஒப்படைக்குமாறு இந்தியா விடுத்த கோரிக்கையை பாகிஸ்தான் இராணுவ அரசு நிராகரித்து விட்டது.

இந்திய விமானத்தைக் கடத்தியவர்களையும் இந்தியா விடுவித்த மூன்று தீவிரவாதிகளையும் விசாரணைகளுக்காக தன்னிடம் ஒப்படைக்குமாறு இந்தியா நேற்று முன்தினம்பாகிஸ்தானிடம்உத்தியோகபூர்வமாக கோரிஇருந்தது. இந்தியாவுக்கான பாகிஸ்தானியத் தூதுவர் அஷ்ரப் ஜகாங்கிர்காஸியை புதுடில்லிக்கு அழைத்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சுச் செயலர் லலித்மான்சிங் இந்தியாவின் கோரிக்கையைத் தெரிவித்தார்.

கடத்தல்காரர்களும் இந்தியா விடுவித்த தீவிரவாதிகளும் பாகிஸ்தானில் இருப்பதாகவும் —

விமானக்கடத்தல், பயங்கரவாதம் விடுவிக்கப்பட்ட தீவிரவாதி மௌலானா அஷார் மசூத் இந்தியாவுக்கு எதிராக வெளியிடும் அறிக்கைகள் ஆகியன 1972 ஆம் ஆண்டின் இந்தியா–பாகிஸ்தான் சிம்லா ஒப்பந்தத்துக்கு எதிரானவை என்றும் இந்தியா பாகிஸ்தானிய தூதரிடம் தெரிவித்திருந்தது.

இந்தியாவின் இந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ள பாகிஸ்தான், விமானக் கடத்தலுடன் பாகிஸ்தானுக்கு தொடர்புள்ளதாக இந்தியா கூறி வருவதையும் மறுத்துள்ளது.

விமானக் கடத்தல் சம்பவத்தை இந்தியா தவறாக வழி நடத்தியதாக இந்திய மக்கள் குற்றம் சாட்டி வருவதில் இருந்து அவர்களது கவனத்தைத்திசை திருப்புவதற்காகவே இந்தியா பாகிஸ்தான் மீது குற்றம்சாட்டி வருகின்றது என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இஸ்லாமாபாத்தில் தெரிவித்தார்.

(ஐ – 6 – 8)

## மத்திய இணை அமைச்சர் உமாபாரதி இராஜினாமா

புதுடில்லி, ஜன. 17
போபாலில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற நகராட்சி மன்றத் தேர்தல்களின் போது பாரதிய ஜனதாக் கட்சி நகராட்சி மன்ற உறுப்பினர்கள் பலர் பொலிஸாரால் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்திய மத்திய சுற்றுலாத் துறை இணை அமைச்சர் உமாபாரதி தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

இன்னும் ஒரிரு நாள்களில் உமாபாரதி பிரதமரைச் சந்திப்பதற்காக புதுடில்லி வரக்கூடும் என்று தெரிவிக்கப் பட்டது. [ஐ–6–8]

## 8 வெளிநாட்டுப்பணியாளர்கள் சூடானில் சுட்டுக் கொலை

காட்டூம், ஜன. 17
சூடானின் தென்பகுதியில் உகண்டா எல்லைக்கு அருகில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் உதவிப் பணியாளர்கள் 8 பேர் இனந் தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

நோர்வே தேவாலய உதவி நிறுவனம் (என். ஜி. ஏ) என்ற அமைப்பைச் சேர்ந்த இருவரும் அவர்களுடன் கடமையாற்றியவர்களுமே கொல்லப்பட்டுள்ளனர்.

உகண்டா கடந்த 16 ஆண்டுகளாக உள்நாட்டுப் போரால் சீர்குலைந்து போயுள்ளது. யுத்தத்தால் இடம் பெயர்ந்துள்ளவர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோரின் விவரங்களைச்சேகரிக்கும் பணியில்பணியாளர்கள்ஈடுபட்டிருந்த சமயமே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உதவிப் பணியாளர்கள் பயணம் செய்த வாகனமும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துக்கு உகண்டா தீவிரவாதிகளே காரணமாக இருக்கும் என்று என். ஜி. ஏ அமைப்பின் அதிகாரி லாசன் கூறினார். (ஐ-6-8)

### கர்மபாலாமா விவகாரம்

## சீனாவுக்கு தகவல் இந்தியா தெரிவிப்பு

தரம்ஸாலா, ஜன. 17
திபெத்தில் இருந்து தப்பி வந்து இந்தியாவின் தரம்ஸாலா நகரில் தங்கி உள்ள திபெத்திய ஆன்மீகத் தலைவரான கர்மபா லாமா இந்தியாவிற்குள் நுழைந்தது பற்றி இந்தியா சீனாவிற்கு உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்தியாவுக்கான சீனத் தூதர் புதுடில்லிக்கு அழைக்கப்பட்டு இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் கர்மபா லாமாவும் அவருடன் வந்த 6 பௌத்த துறவிகளும் எவ்வாறு இந்தியாவின் ஹிமாச்சல் பிரதேசத்துக்குள் நுழைந்தனர் என்பது பற்றி இந்தியாவுக்கு தகவல் தருமாறும் இந்தியா சீனத் தூதரிடம் கேட்டுள்ளது.

சீன அரசாங்கம் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே கர்மபா லாமா இந்தியாவில் தங்கி உள்ளது தொடர்பான தகவல் சீனாவுக்குத் தெரிவிக்கப்பட்டதாக இந்திய வெளியுறவுத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ–6)

## பிரிட்டிஷ் பிரதமரின் மனைவி ரிக்கெட் இன்றி ரயில் பயணம்

### குற்றப்பணம் செலுத்தினார்

லண்டன், ஜன. 17
ரிக்கெட் இன்றிப் பயணம் செய்தமைக்காகப் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளையரின் கர்ப்பவதியான மனைவி குற்றப்பணம் செலுத்தினார்.

இச்சம்பவம் திங்களன்று நடைபெற்றதாகப் பிரதமர் அலுவலகப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஒரு நீதிபதியான ஷெரி பிளேயர் வழக்கு ஒன்றில் ஆஜராகுவதற்காக மத்திய லண்டனில் இருந்து வடக்கே உள்ள லூட்டன் நகருக்குச் சென்ற வழியிலேயே இச்சம்பவம் நடைபெற்றது. தனது பயண டிக்கெட் காலியாகி இருப்பதை வழியில் தெரிந்துகொண்ட ஷெரி பிளையர் லூட்டன் போய்ச் சேர்ந்ததும் ரிக்கெட் பரிசோதகருடன் தொடர்பு கொண்டு தான் ரிக்கெட் இன்றிப் பயணம் செய்த தகவலைத் தெரிவித்தார். அதற்கான பணத்தையும் குற்றப்பணமாக மேலும் 10 பவுண்களையும் செலுத்தினார்.

1998 இல் நீதிபதியாக நியமனம் பெற்ற ஷெரி பிளயர் தற்போது நான்கு மாத கர்ப்பவதியாக உள்ளார்.

(ஐ–6)

### உலக அரங்கில்

## சோதனை

புதுடில்லி, ஜன. 17
இந்தியாவின் பீஹார் மாநிலத்தில் இடம்பெற்ற கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் வீடுகளில் இந்திய வருமானவரித்துறை அதிகாரிகள்திடீர் சோதனைகளை நடத்தியுள்ளனர்.

இந்த சோதனைகளின் போது அவர்களிடம் இருந்த சுமார் 60 கோடி இந்திய ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குரிய ஆவணங்களை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

## வழக்குத்தாக்கல்

ரான்ஸி நிலபேர ஊழல் வழக்கில் இருந்து முன்னாள் முதல்வரும் அ. தி. மு. க பொதுச் செயலருமான செல்வி ஜெயலலிதா விடுவிக்கப்பட்டதை எதிர்த்து தமிழக அரசு உயர் நீதிமன்றில் மனுச்செய்ய உள்ளதாக அரச சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

தமிழக அரசுக்கு சொந்தமான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் சொத்துக்களை ஜெயலலிதா மற்றும் சசிகலாவின் பெயரில் மிகக் குறைந்த விலைக்கு விற்க உத்தரவிட்டது தொடர்பாக ஜெயலலிதா மீது இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது. குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கப் போதுமான ஆதாரம் இல்லை என்று கூறி நீதிபதி வழக்கில் இருந்து ஜெயலலிதாவை விடுவித்தார்.


### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியரும் எமது நண்பி அருந்ததி அவர்களின் தாயாருமான

**அமராவதி சிவபாதசுந்தரம்**
அவர்கள்

சிவபதம் எய்தியதையிட்டு துயருறும் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

99 A/L கலைப்பிரிவு நண்பிகள்
யாழ். இந்துமகளிர் கல்லூரி.

[72751]

### கண்ணீர் அஞ்சலி

கடந்த 14 - 01 - 2000 அன்று படுகொலை செய்யப்பட்ட பருத்தித்துறை நகரசபைத் தலைவர்,

**வடிவேலு விஜயரட்ணம்** அவர்களுக்கும்
அவரது சபை ஊழியரான
**முதலி பகீரதனுக்கும்**

எமது சபையின் ஆழ்ந்த அனுதாபங்களையும் கண்ணீரஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் சபையினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

தலைவர், உறுப்பினர்கள்,
ஊழியர்கள்.

வலி. தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய். (சி-10659)

### கண்ணீர் அஞ்சலி

பொருளியல் ஆசிரியர்
திரு. S. வரதராஜன் அவர்களின்
அன்புத் தாயார்

**சின்னத்துரை மகேஸ்வரி**

அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிர்வாகி,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
றோயல் அக்கடமி.
சாவகச்சேரி.

[72743]

### கண்ணீர் அஞ்சலி

எமது பொருளியல் விரிவுரையாளர்
S. வரதராஜன்
அவர்களின் தாயார்

**சி. மகேஸ்வரி**

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர்ப் பூக்களை அவர்களுக்கு காணிக்கையாக்குவதோடு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகி, விரிவுரையாளர்கள்.
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(72753)

### கண்ணீர் அஞ்சலி

கடந்த 14—01—2000 அன்று படுகொலை செய்யப்பட்ட பருத்தித்துறை நகர சபைத் தலைவர்

**வடிவேலு விஜயரட்ணம்**
அவர்களுக்கும்
சபையின் ஊழியர்
**முதலி பகீரதன்**
அவர்களுக்கும்

எமது சபையின் ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் சபையினருக்கும் எங்களின் ஆழ்ந்த அனுதாபங்கள்.

தலைவர், உறுப்பினர்கள்,
ஊழியர்கள்.

வலி. மேற்குப் பிரதேச சபை,
சுழிபுரம். [சி/10660]

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தவறி விட்டது

சாந்தினி சந்திரசேகரம் திருகோணமலை என்ற எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (603052902 V-0724410094 5F) மானிப்பாய்க்கும் - யாழ். பஸ் நிலையத்துக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து S.R. மகேந்திரம் ஸ்ரோர்ஸ், ஸ்ரேசன் றோட், கோண்டாவில்மேற்கு கோண்டாவில் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் ஆயிரம் ரூபா வழங்கப்படும். (72742)

துர்க்கா தேவஸ்தானத்தைச் சேர்ந்த செல்வி பாலரஞ்சினி பாலகிருஸ்ணன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0907001288) 08. 01. 2000 அன்று உரும்பிராய் வீதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அல்லது துர்க்காதேவி மணிமண்டபத்தில் ஒப்படைத்து உதவவும். (72737)

## விற்பனைக்கு

தனிப்பாவனையில் இருந்த Quingqi மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு; T. சகாதேவன் 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம். (72708)

Yashica FX 3, Nikon ஓட்டோ போக்கஸ் 12X10 கமரா லென்சுடன் விற்பனைக்குஉண்டு மனோ இல. 211. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (72689)

நல்ல நிலையில் உள்ள பதியப்படாத பஜாஜ் 4 S சம்பியன் (பஜ் மொடல்), மோட்டார் சைக்கிள், குளிர்சாதனப் பெட்டி, பஜாஜ் ஸ்கூட்டர் என்பன விற்பனைக்குண்டு. N. பாரக் 48, இரண்டாவது லேன், பிறவுண் றோட், கந்தர்மடம். (72712)

கோழி எரு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வரை) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (72716)

Shriram Honda E. 650 ஜெனரேற்றரும், மரத்தளபாட வேலைக்குரிய Band Saw இயந்திரமும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 67, செட்டித் தெரு, நல்லூர். (72687)

## யாழ். நகரில் சுவரொட்டிகள்

ஈ. பி. ஆர். எல். எவ் விலிருந்து வரதராஜப்பெருமாள் நீக்கப்பட்டமையைக் கண்டித்து யாழ். நகரின் பல இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஈ. பி. ஆர். எல். எவ் வின் யாழ். பிராந்திய தோழர்கள் என்னும் பெயரில் இச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. (ஜ-5)


ENGLISH
Spoken
And
Grammar
By:- Brito

புதிய பிரிவு ஆரம்பம்
(திங்கள், புதன்)
(மாலை 4.30 ப. நே.)
நாள்: 17-01-2000
நேரம்: மாலை 4. 30
(பழைய நேரம்)
இடம்: கொக்குவில்.
(ஞானபண்டிதர் அருகில்),
(சி/10633)


## விற்பனையாகின்றன

2000 புது வருஷ பலாபலன்கள், அழகியல்-இசைப்பாடல்கள் (தரம் 1 — 5 வரை), ஆங்கிலத்தில் கட்டுரைகள், 'பொது அறிவு' வெளியீடு: V.A. சிவராசா 152B, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (72740)

## தவறி விட்டது

இல. 15/1, 3ஆம் குறுக்கு வீதி, பாஷையூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குணரட்ணம் காந்தரூபன் என்பவரது விசேட அ. அ. [இல. 0901033199] 13-01-2000 அன்று கொக்குவிலுக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்து உதவவும். (72738)

## மணமகள் தேவை

26.1.52 இல் பிறந்த அவுஸ்திரேலிய நிரந்தர வசிப்புரிமை பெற்ற பூராட நட்சத்திர மணமகனுக்கு 38 வயதிற்கு மேற்படாத எண் பொருத்தமுடைய மணப்பெண் தேவை. நற்குடும்பம், நல்ல தோற்றம் ஆங்கில அறிவு அவசியம் பூரண விவரங்கள், படத்துடன் தொடர்பு கொள்ளவும். T. சகாதேவன் 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். (72707)

## திருமண சேவை

உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் இந்து, கிறிஸ்தவ மணமக்கள் உண்டு. துரிதமான திருப்திகரமான சேவை. நேரிலோ தபால் மூலமோ தொடர்பு கொள்ளலாம். கு. திருவிளங்கம், இல. 90, சட்டநாதர் கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (72713)


BESKORTS (Lodging)
பெஸ்க்கோட்ஸ்
(தங்கு, விடுதி)

கொழும்பு நகருக்கு வருவோருக்கு எல்லா வசதிகளுடனும் குடும்பத்துடனோ, தனியாகவோ, தங்குவதற்கு ஏற்ற இடம் "பெஸ்ட் கோட்ஸ்" தங்குவிடுதி (Beskorts Lodging).

இணைந்த குளியலறை, அறையிலேயே தொலைத்தொடர்பு வசதி, மருத்துவ வசதி
நகரத்தின் மத்தியில் அமைந்தது

BESKORTS LODGING.
79, Messenger St. Colombo 12.
T. Phone - 338562, 329043
(72648)


## வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்
## 2000 ஆண்டுக்கான
## வழங்குநர்களையும். திருத்துநர்களையும்
# பதிவு செய்தல்

எமது நகராட்சி மன்றத்திற்கு பின்வரும் பொருள்களை 2000 ஆம் ஆண்டிற்கு வழங்கக் கூடியவர்களிடமிருந்தும், உழவு இயந்திரங்கள், குப்பை வண்டிகள் ஆகியவற்றைத் திருத்தக்கூடியவர்களிடமிருந்தும் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. காகிதாதிகள், எழுதுபொருள்கள் -
2. அச்சிட்ட படிவங்கள். பதிவேடுகள் -
3. சுகாதாரப் பொருள்கள்
   [சாக்கு, தும்புத்தடி, மலகூட வாளி, குப்பை வாரி, சவள், மண்வெட்டி, முள்ளு மண்வெட்டி, லைகோல், வடிகால் கழுவும் பிரஷ், ரி. சி. எல். பவுடர்]
4. மரத்தளபாடங்கள். உருக்கு அலுமாரிகள் வழங்கல், திருத்தவேலைகள், கதிரைகள் பின்னல் -
5. உருக்குத்தளபாடங்கள் திருத்த வேலைகள் -
6. உழவு இயந்திர உதிரிப்பாகங்கள் -
7. தட்டச்சு இயந்திரம் திருத்துதல் -
8. உழவு இயந்திரம் திருத்துதல் -
9. வண்டி, வாகனத் தகடுகள் வழங்குதல்.

மேற்குறிப்பிட்டவற்றுக்கு வழங்குநர்களாகவும் திருத்துநர்களாகவும் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப்படிவத்தை ரூபா 50 ஐ பதிவுக்கட்டணமாகச் செலுத்திப் பெற்று 21-01-2000 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குநராக/திருத்துநராக பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ம. க. சிவாஜிலிங்கம்
தலைவர்
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
07—01—2000

[சி/10647]


மங்களகரமான ஆரம்பம்

ராஜ் தொலைத் தொடர்பகம்

17—01—2000 இன்று முதல் மிகவும் அமைதியான சூழலில் எமது தொலைத் தொடர்பு சேவையை நண்பகல் 12. 10 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொ. பேசி எண் | உள்ளூர்: 070-212850 | வெளியூர்: 0094-70-212850

ராஜ் தொலைத் தொடர்பகம்
சண்முகம் வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.
[72748]


# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## சீவரட்ணம் உதயகுமார்
(கவட்டிக் கண்ணன்)

பிறப்பு 31-08-1964 | அழிப்பு 16-01-1997

நீர் தந்த நினைவுகள்......
ஒவ்வொரு நிமிடமும் மறக்கவே முடியாத
ஞாபகங்கள்
மீண்டும் உம்மையே நினைவூட்டுகின்றன
எமக்குள் பிரிவு நிச்சயம் ஆனதும் ஏனோ?
இது இறைவனின் நியதியல்லவே
இடையில் வந்த இவர்கள் அமைத்த
தீர்மானமானதே ஐயனே!
எமது வாழ்வைத் தான் அழித்தனர்
உமது மங்காத பெயரையும் வற்றாத
புகழையும் மறைக்க முடிந்ததா?
முடியவே முடியாது!
மரணம் அனைவருக்கும் பொதுவானது;
மரணத்தின் பின்பும் வாழ்பவர் சிலரே
அதில் தான் நான் அமைதி காண்கின்றேன்
என் உயிரின் உயிரானவரே
உமது பெருமைகளையே பிள்ளைகட்கு
உணவாகப் பகிர்கின்றேன்
நீர் சென்று மறைந்தாலும்
உமது செல்வங்கள் என்றும்
புகழ் சேர்க்கும் தங்களுக்கு
தித்திக்கும் பொங்கல் எம்மைத்
தத்தளிக்க வைத்ததேயப்பா
பொங்குதே எங்கள் நெஞ்சமெல்லாம்
பொழுதுகள் முழுவதும் உங்களை எண்ணி
ஆண்டுகள் மூன்றும் சென்றதே
ஆறவில்லை அப்பா எம் துயர்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுடனே உயர்ந்திடுவோம்
அன்புத் தந்தையே!
வாடாத மலராய் வற்றாத
அன்பு ஊற்றாய் நீயிருப்பாய் என்றிருந்தோம்
சீராட்டி வளர்த்த செல்வங்கள்
சிறப்புப் பாராமல் பறந்தோடிச்
சென்றதேனோ கண்ணா!
எம் பாசம் மாறாது உன் நினைவும் மறையாது
எம் மனது அமைதி பெற நீ வந்து சாந்தி கொடு!
பெறுக சாந்தி!

- குடும்பத்தினர்

77/58, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
(72741)

# அறிவித்தல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சட்டணம் பெற்றுக்கல்வி கற்பிக்கும் அரச நன்கொடை பெறாத பாடசாலைகளும் கல்வி நிலையங்கள், தனியார் கல்வி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புகள், நடனம், நாட்டியம், சங்கீதம், மற்றும் பயிற்சி வகுப்புக்கள், ஏனைய பயிற்சி வகுப்பு நடத்துனர்கள் ஆகியோர் எதிர்வரும் 2000-1-24 ஆம் திகதி பிற்பகல் 4.00 மணிக்கு வலிகாமம் மேற்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

ந. திரிலோகநாதன்,
தலைவர்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
(சி/10656)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 11 — 1945

மறைவு: 19 — 12 — 1999

## திருமதி பராசக்தி சரவணமுத்து

ஆவரங்காலில் வளர்ந்து சரசாலையிலே புகுந்து
ஆசையாய் பாசமாய் அணைத்து மகிழ்ந்தவளே!
தேவார திருவாசகத்தைத் தெவிட்டாது
கேட்டுணர்ந்து
தெய்வமே எனைக் கொண்டுபோ என்று
கேட்டாயோ?
நோயிலே துடியாமல் பாயிலே மடியாமல்
நுணுவில் விநாயகன்தான் உனைக்கொண்டு
ஏகினனோ?
ஓயாமல் அழுகின்றோம் ஓரிடத்தும் காணாமல்
ஒருபொழுதில் மறைந்தனையே பராசக்தி
அம்மா நீ!

- குடும்பத்தினர்

சரசாலை வடக்கு. (சி-10657)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் குமாரசாமி இராசரத்தினம்

(முன்னாள் ஆய்வுகூட உதவியாளர், ஹாட்லிக் கல்லூரி, உரிமையாளர், சயன்ஸ் சென்ரா கரவெட்டி, மொடேன் எடியுக்கேசன் சென்ரர்)

தோற்றம்: 09-07-1942

மறைவு: 30-01-1996

திதி: 16-01-2000 (தசமி)

கண்ணின் மணிகளாய் எமைக் காத்தீர்
காட்சிக்கு எளியவராய் மிளிர்ந்திருந்தீர்.
பண்பும் பரிவும் மிக்கவராய்
பாரினில் என்றும் உயர்ந்திடுவீர்.
அன்றே நிகழ்ந்தது உன்பிரிவு
என்றும் என்றும் உமை நினைத்து
அஞ்சலிகள் செலுத்தி நிற்போம்.

- குடும்பத்தினர்.

நெல்லியடி, கரவெட்டி. (72328)

# பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற ஒருவாரத்துக்கு முன் விண்ணப்பிக்குக!

## கடைசி நேரம் வரை காத்திருக்க வேண்டாம் என அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ் மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிப்போர் தமக்கு தேவையான நாளுக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே விண்ணப்பிக்குமாறு மேலதிக மாவட்டப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

முதல் நாள் விண்ணப்பத்தைக் கொடுத்துவிட்டு மறுநாள் சிபார்சுக் கடிதத்துடன் வருவோரினால் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள ஊழியர்கள் தமது கடமையைச் செய்வதற்கு இடையூறு ஏற்படுகிறது என்று அவர் கூறினார்.

நாட்டின் தென்பகுதிக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ செல்வோர் பயண ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு முன்னர் விண்ணப்பத்தை அனுப்பி வைத்தால் ஒரு வாரத்தில் அவர்களுக்குரிய பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

குடாநாட்டில் உள்ள அனைவரும் தமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை முதலிலேயே எடுத்து வைத்திருந்தால் அவசர தேவைகளின் போது அவற்றைப் பயன்படுத்த முடியும் எனவும் அவர் கூறினார்.

தற்பொழுது தினமும் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு ஒரு வாரத்தில் அவர்களுக்குரிய அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படுவதாகவும் சில விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்பொழுது அவர்களின் அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லை என முடிவு செய்யாது மீள்பரிசிலனைக்கு விண்ணப்பிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (இ-10)

## பாடசாலையில் பொங்கல் விழா

நல்லூர், ஜன. 17

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் எஸ். சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஐ-103)

## ஆனையிறவுக்கு படையணி!

இதுவரை காலமும் வவுனியாப் பகுதியில் நிலைகொண்டிருந்த - 54 ஆவது படையணியின் ஒரு பிரிவு-தற்போது ஆனையிறவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஆனையிறவு மற்றும் பளைப் பிரதேசங்களில் 54 ஆவது படையணி நிலைகொண்டுள்ளது. அதன் தலைமையகம் ஆனையிறவில் உள்ளது. அப்படையணியின் ஒரு பிரிவு மட்டும் இதுவரை வவுனியாவில் நிலைகொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## கண் காட்சி

வலி. கிழக்கு ஜன. 17

கோப்பாய் தெற்கு கட்டப்பிராய் இளஞ்சுடர் இளைஞர் கழகத்தினால் நடத்தப்படும் நடமாடும் பயிற்சி நெறியின் கண்காட்சியும், விற்பனையும் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கழக மண்டபத்தில் தலைவர் அ. பிரதீபன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரனும் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குநர் தி. சிவதெட்சணாமூர்த்தியும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளர் எஸ். ரவியும் கலந்து கொள்வர். (ஐ-180)

# வாழ்வகம் வாழ்த்துகிறோம்

பவள விழாக் கண்ட எம் அன்னை
சிவத்தமிழ்ச் செல்வி
கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J. P
அவர்களை

''சைவமும் தமிழும் தலை நிமிரவைக்கும் சிவத் தமிழ்ச்செல்வியே! ''அன்பே சிவம்'' என்பதற்கு அடையாளமாக திகழும் எம் தங்கத் திருவுருவே!! அருளின் வடிவான அன்னையே!!! நீ, இன்னும் அகவை பல கண்டு எம் நலம் காக்க, என்றும் இறை பதம் போற்றி இனிதே வாழ்த்துகின்றோம்!''

வாழ்வகம்
பிள்ளைகளும், நிர்வாகமும்..
யாழ் வீதி, மானிப்பாய். (72727)

# உதவும் கரங்கள்

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவச் செல்வங்களின் கல்வி முன்னேற்றம் கருதி ''உதவும் கரங்கள்'' அமைப்பின் கீழ் இலவச பாடசாலைப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கு விண்ணப்பிப்போர் அவரவர் வதிவிடங்களுக்கு அண்மையிலுள்ள எமது சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் பேக்கரி உரிமையாளர் ஒருவருடன் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 23-01-2000

செயலாளர்
''உதவும் கரங்கள்''
யா. மா. பே. உ. ச,
317, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10622)

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி நல்லம்மா சிற்றம்பலம்

தோற்றம்: 26-11-1933

மறைவு: 27-01-1999

திதி: 17-01-2000

ஆண்டொன்று ஓடி மறைந்தது அம்மா எம்துயரம் ஆறவில்லை. என்றென்றும் உங்கள் நினைவு மலர்கின்றது. வேண்டுவதெல்லாம் இறைவனிடம் சாந்தியே அம்மா.

என்றும் நினைவுடன்
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சந்தாதோட்டம்,
புலோலி கிழக்கு. (72379)

யாழ்ப்பாண மாவட்டக்

# கூட்டுறவுச்சபை அறிவித்தல்

## மனைப்பொருளியல் அடிப்படைப் பயிற்சி நெறி

தையல், மனையியல், ஐசிங், பூவேலை, முதலுதவி, கோலம்போடுதல், தலையலங்காரம், தலைமைத்துவம், கூட்டுறவு

ஆகிய விடயங்களை உள்ளடக்கிய மேற்படி பயிற்சி நெறி மாசி மாதம் முற்பகுதியில் சபையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. பயிற்சிபெற விரும்புவோர் ''மாவட்டச் செயலாளர், இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கு தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற்று 30-01-2000 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

- மாவட்டச் செயலாளர்

இல. 14, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி/10651)

சுகாதாரச் சீர்கேடா? யார் காரணம்?
உள்ளூராட்சிச் சபையா?
சுகாதாரத் திணைக்களமா?
கவலை வேண்டாம்!

## இதோ
## நல்ல சுத்தம் [கிளீன்வெல்] நிறுவனம்

உங்கள் தனிச் சுகாதாரத்தையும் பொதுச் சுகாதாரத்தையும் மேம்படுத்த வந்துவிட்டது.

'' சுத்தம் சுகம் தரும் '' — முதுமொழி.
'' நல்ல சுத்தம் பொருளாதாரத்தை மேம்படுத்தும் '' — புதுமொழி.

உங்கள் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:

**கிளீன்வெல்**
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2849 (72530)

# விரிவுரைகள் பெப்ரவரியில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 17

விடுமுறைக்காக மூடப்பட்டுள்ள யாழ். தொழில் நுட்பக் கல்லூரி முதலாம் தவணைக்காக பெப்ரவரி மாதம் முதலாம் திகதியே ஆரம்பமாகும் என இயக்குநர் க. ஜெயரட்ணம் அறிவித்துள்ளார்.

கல்லூரி இன்று 17 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

கொழும்பிலிருந்துகிடைத்த அறிவித்தலைத் தொடர்ந்து விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதி பிற்போடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ–8)

# வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம்
குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459
(72296)

# அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ்

கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு சுகாதாரத் திணைக்களத்தினால் புதிய அம்புலன்ஸ் வண்டி ஒன்று கடந்த 12 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக இந்த ஆஸ்பத்திரியில் இருந்து நோயாளர்களை அவசர சிகிச்சைக்காக யாழ். மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வாடகைக் காரே பயன்படுத்தப்பட்டு வந்தது. (ஐ–180)

சுழிபுரம்
அருள்மிகு

## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
# கும்பாபிஷேக தினம்
## ( மணவாளக்கோலம் )

நிகழும் பிரமாதி வருடம் தை மாதம் 4 ஆம் நாள் நாளை (18—01—2000) செவ்வாய்க்கிழமை அம்பாளுக்கு காலை 9.00 மணிக்கு சங்காபிஷேகமும் (108) 12.00 மணிக்கு விசேட பூசைகளும் நடைபெறும்.

மாலை 3.30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று, திருவூஞ்சல் பாடப்பெற்று அம்பாள் பூந்தண்டிகையில் வீதி உலா வருவார்.

தேவஸ்தான பரிபாலன சபையினர்.
(72685)

# கலாலயா பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

## மகளிருக்கான
## டிப்ளோமா மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

- **கேக் ஐஸிங்**
  (பட்டர் ஐஸிங், றோயல் ஐஸிங், பாச்மென்ட் ஐஸிங், புறொஸ்றிங் ஐஸிங், Fondant Icing மற்றும் மாச்சினி அலங்காரம்)
- **உணவு தயாரித்தல்**
  (கீழைத்தேச, மேலைத்தேச உணவுகள், சிற்றுண்டிகள், புடிங் வகைகள், குளிர்பானங்கள், ஐஸ்கிறீம் வகைகள், சூப் வகைகள் தயாரித்தல் இத்துடன் உணவை அலங்கரிக்கும் முறை, மரக்கறிகளைக் குடைந்து உருவங்கள் செய்தல், மேசை அலங்காரம், உணவு பரிமாறும் விதம்)
- **உடை தயாரித்தல்**
  (குழந்தைகள், சிறுவர், மகளிருக்கான உடைகள், கதிரை விரிப்பு, தலையணை உறை தைத்தல், பூப்போடுதல்)
- **பூவேலை**
  (ஸ்ரொக்கிநெற், டிப்இன் மலர்கள் Panclay மலர்கள், பேப்பர் றிபன் மலர்கள், துணியினால் மலர்கள், மலர்ச்செண்டுகள் Bouquet செய்தல்)
- **கைவேலை**
  ( பேப்பர் அலங்காரம், Soft Toys. வைக்கோல் வேலை, கழிவுத்துணி வேலை, கம்பளி நூல் வேலை, றிபன் வேலை )
- **பப்றிக் வர்ணம் தீட்டுதல் (FABRIC PAINTING)**
  ( கதிரை விரிப்பு, தலையணை உறை உடைகளில் வர்ணம் தீட்டுதல்)

ஆகிய பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படும். மேற்படி பயிற்சிகள் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புக்கள் நடைபெறும்.

- பயிற்சிக் காலம் 6 மாதம்
- பயிற்சியின் முடிவில் டிப்ளோமா தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்.
- இப்பயிற்சிக்கு வயதெல்லை கிடையாது.
- கிழமை நாள் பயிற்சிகள் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாள்களில் காலை 9.00 மணி முதல் பி. ப. 1.00 மணி வரை நடைபெறும்.
- சனி, ஞாயிறு பயிற்சிகள் காலை 9.00 மணிமுதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

**கிழமை நாள் புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 24-01-2000 (திங்கள்)**
**சனி, ஞாயிறு புதிய வகுப்புக்கள் ஆரம்பம்: 23-01-2000 (ஞாயிறு)**
மேலும் விவரங்களுக்கு காலை 9.00 முதல் பி. ப. 2.00 வரை நேரில் வரவும்.

– இயக்குநர்

(சி/10834)

## நகராட்சி மன்றம் பருத்தித்துறை
## வழங்குநர்கள் ஒப்பந்தகாரர்களைப்
# பதிவு செய்தல் - 2000

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கு பொருள்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள்/ உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 28 - 01 – 2000 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

01. காகிதாதிகள், எழுது பொருள்கள்-
02. அலுவலக உபகரணங்கள்.
03. கட்டடப் பொருள்கள். (மண், சீமெந்து, சல்லிவகைகள்)
04. இலத்திரனியல் சாதனம். (மின் உபகரணம் கணிப்பிடும் கருவி போன்றவை)
05. கோலவுடைத் துணிகள், பன்னல் துணிகள், ஏனைய துணிகள்.
06, பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோற் பொருள்கள்.
07, தும்புத்தடி, விளக்குமாறு. நார்க் கடகம் முதலியன.
08. சுத்திகரிப்புப் பிரிவுக்கான கிருமிநாசினிகளும் மருந்துகளும்.
09. வேலைப்பகுதி/ சுத்திகரிப்புப் பகுதிக்குத் தேவையான மண்வெட்டி, அலவாங்கு, பிக்கான் போன்றவை.
10. நூலகங்களுக்குரிய நூல்கள்.

## சேவைகள்

01. அச்சிடுதல், புத்தகங்கள் கட்டுதல்
02. தட்டச்சு இயந்திரம் திருத்தம்
03. மோட்டார் வாகனங்கள் திருத்தம்
04. இறப்பர் முத்திரை தயாரித்தல், புளொக் தயாரித்தல்

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல் சேவைகள் 2000 ஆம் ஆண்டெனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள், ''தலைவர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை'' என முகவரியிடப்பட வேண்டும். ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனியான விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக ரூபா 100 பெறுமதியான தலைவர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை என்ற பெயருக்கு பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளையை இணைத்து அனுப்பவேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் எமது நகராட்சி மன்ற பணிமனையில் நேரடியாகச் செலுத்தமுடியும்.

கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் இருந்துகோரப்படும் ஆயினும் வேறிடங்களிலிருந்து கூறுவிலைகள் கோரவும் நகராட்சிமன்றத்திற்கு உரிமை உண்டு.

கோரப்படும் பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்கள் / சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள்/ சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

வ. விசயரட்ணம்
(ஜே. பி. யு. எம்)
தலைவர்
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை,
12-1-2000. (சி/10644)

## உதயன்

### ஜே. ஆர். போட்ட சட்டப் பூட்டு!

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சி தாவுவதற்கு சட்ட அங்கீகாரம் அளிக்கும் வகையில் அரசமைப்புத் திருத்தம் கொண்டு வர அரசு முயல்கிறது.

தற்போதைய அரசமைப்பு 1978 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையிலான அரசினால் கொண்டு வரப்பட்டது. தொகுதிரீதியாக நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் தேர்தல் முறையின் கீழ் நாடாளுமன்றத்தில் தமக்குக் கிடைத்த மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை வைத்துக் கொண்டு புதிய அரசமைப்பை ஜே. ஆர். கொண்டு வந்தார்.

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு பெறாமல் இந்த அரசமைப்பிற்கு எந்தத் திருத்தத்தையும் செய்ய முடியாது என்ற ஏற்பாட்டையும் அந்த அரசமைப்பில் சேர்த்துக் கொண்டு ஒரு சட்டப் பூட்டையும் போட்டுக் கொண்டார்.

அந்த அரசமைப்பில் எம்.பிக்களைத் தொகுதி ரீதியாகத் தெரிவு செய்யும் தேர்தல் முறையை இல்லாமல் செய்து, மாவட்டரீதியில் வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப— விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையில் எம்.பிக்களை தெரிவு செய்யும் முறையையும் அவர் கொண்டு வந்தார்.

இந்த முறையின் கீழ், எந்தப் பெரிய கட்சிக்கும் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைக்க மாட்டாது என்பது ஜே. ஆருக்கு நன்கு தெரியும். எனவே அரசமைப்பைத் திருத்த முடியாமல் தான் போட்ட சட்டப் பூட்டுக்கு தன்னுடைய ஆட்சிக் காலத்தில் தனது கையில் மாத்திரம் திறப்பை வைத்துக் கொள்ளும்படி அவர் பார்த்துக் கொண்டார்.

கடைசியாக தான் பதவி விலகிப் போகும் காலத்தில், அந்தச் சாவி அடுத்த ஜனாதிபதிக்கு (அவர் தன் கட்சியைச் சேர்ந்தவராக வந்தாலும் அவருக்குக் கூட) — சிறிது காலத்துக்குத் தன்னும் — கிடைக்காமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஐ. தே. கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த நாடாளுமன்றத்தைக் கலைக்கும் பிரகடனத்தை வெளியிட்டார்.

1978 முதல் 1988 வரை — மொத்தம் 16 அரசமைப்புத் திருத்தங்களைச் செய்த ஜே. ஆர். அதற்குப் பின் இந்தப் பன்னிரண்டு வருடங்களிலும் — ஒரு திருத்தம் கூடச் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தி வைத்துவிட்டுப் போய்விட்டார்.

ஜே. ஆர். போட்ட சட்டப் பூட்டை திறப்பதற்கு சந்திரிகா அரசு முயல்கின்றது. ஆனால் அது அவ்வளவு சுலபமானதல்ல.

முக்கிய விடயங்களில் மாற்றம் கொண்டு வரும் அரசமைப்புத் திருத்தம் மூன்றில் இரண்டுபங்கு ஆதரவுடன் நிறைவேற்றுவது மட்டுமல்லாமல், சர்வஜனவாக்கெடுப்பு மூலம் மக்கள் அங்கீகாரம் பெறவேண்டும் என்றும் ஜே. ஆரின் அரசமைப்பு கூறுகிறது. எனவே கட்சி மாறுவதற்கு அநுமதி அளிக்கும் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முதலில் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவை. அது தற்போதைய அரசுக்குக் கிட்டுமா? அதற்குப் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் கூறினால் கட்சி மாறுவதை அனுமதிப்பதற்காக ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படுமா? இவையே இப்போதுள்ள கேள்விகள்.

# ஒளவைபோல அன்னை தங்கம்மாவும் சமாதானப்பணியில் ஈடுபட வேண்டும்

## பவளவிழாவில் வைத்து பேராயர் ஜெபநேசன் வேண்டுகோள்

மல்லாகம், ஜன. 17

சோழனையும் சேரனையும் சமாதானம் செய்து வைக்கக் கூடிய தகுதி ஒளவைப் பிராட்டியிடம் இருந்தது. அவர் வேறு பலரையும் சமாதானம் செய்து வைத்தார். இந்த நாட்டில் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற தலைவியாக விளங்குகிறார் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி. அவரை நான் மற்றொரு ஒளவையாராகப் பார்க்கிறேன். இன்று எமது ஒளவையாராக விளங்கும் அம்மையார் சமாதானப் பணியிலும் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் அதிவண. கலாநிதி ஜெபநேசன்.

சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவளவிழா இம்மாதம் ஏழாம் திகதி தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு ஆசியுரை நல்கிய போதே பேராயர் மேற்சொன்ன வேண்டுகோளை விடுத்தார்.

பவளவிழா நிகழ்வுகளுக்கு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமை வகித்தார்.

பேராயர் ஜெபநேசன் தமது ஆசியுரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

கலாநிதிதங்கம்மா அப்பாக்குட்டி இந்த நாட்டில் சகலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற, மதிக்கப்படுகின்ற பெரும் தலைவியாக விளங்குகின்றார். அவர் பொறுப்பு வாய்ந்த சமூகத் தலைவியாகப் பணியாற்றுகிறார். இந்த நாட்டில் வாழும் தமிழர்கள் அனைவரும் அம்மையாரின் சொல்லுக்கு மதிப்பளிப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆகையால் அம்மா தமது ஆன்மீக, சமூகப் பணிகளோடு இந்த நாட்டில் நிரந்தர சமாதானம் உருவாகவும் உதவ வேண்டும்.

வடக்கு — கிழக்கில் மட்டும் 35,000 இளம் விதவைகள் உள்ளனர். ஆயிரக்கணக்கான அநாதைக் குழந்தைகள் இருக்கின்றனர். இவர்கள் குறித்துச் சிந்திப்பவர் அம்மையார். மனித நேயப் பணிகளை ஆற்றும் அம்மையாருக்கு எல்லோரும் உதவ வேண்டும் — என்றார்.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தமது தலைமையுரையில் —

இன்று தன் ஆளுமையால் பல்லாயிரம் மக்களை வழி நடத்தும் தகுதியைப் பெற்றவர் அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். எம் நாட்டில் எவ்வித எதிர்பார்ப்புமின்றி தன்வாழ்வை அர்ப்பணித்துப் பணியாற்றி வரும் பெருந்தகை இவர். அம்மையாரை எமது யாழ். பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கி பல்கலைக்கழகம் தன் பெருமையை நிலைநாட்டியதை உலகம் அறியும். அவர் ஆற்றிய ஆன்மீகப்பணிகள், நொந்தவர்களுக்கு ஆற்றிய சமுதாயப் பணிகள் போற்றுதலுக்குரியனவாகும் — என்று சொன்னார்.

மல்லாகம் மாவட்ட பதில் நீதிபதியும், பவளவிழாச் சபைத் தலைவருமான திரு. மு. சபாநாதன் தமது வரவேற்புரையில் கூறியதாவது:-

எமது இனம் படும் சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் வாழும் இவ்வேளை ஆடம்பரங்களைத் தவிர்த்து அத்தியாவசியமான பணிகளை விழாவை மையமாகக் கொண்டு செயற்படுத்த வேண்டும் என அம்மா அவர்கள் பவளவிழாச் சபையினராகிய எமக்கு கட்டளையிட்டார். அதன் அடிப்படையில் இன்று அம்மாவின் திருக்கரத்தால் இரண்டு முக்கிய நிகழ்ச்சிகளை எமது தேவஸ்தானம் ஏற்படுத்தியுள்ளது. ஆதரவற்ற முதியோருக்கான சிவத்தமிழ்ச்செல்வி முதியோர் இல்லமும் எமது சைவத்தமிழ் ஆவணங்களைக் காப்பதற்கான துர்க்காதுரந்தரி சைவத்தமிழ் ஆய்வு நூலகமும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இந்த இரண்டு பணிகளும் அம்மாவின் எழுபத்தைந்தாவது வயதின் ஞாபகச் சின்னங்களாகும். எமது சந்ததிகளுக்கு எதிர்காலத்தில் மிகவும் பயனுள்ள காரியங்களை அம்மாவின் பவளவிழா ஞாபகமாக உருவாக்கியுள்ளோம் — என்றார்.

மாவை கந்தசாமி கோயில் ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ சண்முகநாதக்குருக்கள் தமது ஆசியுரையில் —

தங்கம்மா அப்பாக்குட்டியின் காலத்தில் நாமும் வாழ்கிறோம் என்பது எமக்குப் பெருமை. பெண் என்பவள் எவ்வளவு காரியங்களை சாதிக்க முடிந்தவள் என்பதற்கு உதாரணகர்த்தாவாக விளங்குபவர் இவர். உலகாயுத வாழ்வுக்கு அனைவரும் அகப்படும் இன்றைய வாழ்வில் நாவலர் போல் உலகாயுத வாழ்வில் இருந்து தப்பி உலகம் வாழ்வதற்காக வாழும் பாக்கியம் பெற்றவர் சிவத்தமிழ்ச்செல்வி — என்றார்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ. விக்கினராஜா தமது பாராட்டுரையில் தெரிவித்ததாவது;-

### ஆலய நிர்வாகப் பயிற்சி நிலையம்

எமது இந்து சமயத்தின் கலங்கரை விளக்கமாக துலங்கிக்கொண்டு இருக்கும் ஈழத்து இந்துக்களின் தலைவியாக விளங்கும் அன்னை நீண்டகாலம் வாழவேண்டும் என அனைவரும் பிரார்த்திக்க வேண்டும்.

எமது நாட்டில் இன்று இந்துசமய ஆலயங்களில் நிர்வாகச் சீர்கேடு இருப்பதை யாவரும் அறிவர். ஆலயம் சம்பந்தமான பிணக்குகள் தினமும் நீதிமன்றுகளுக்கு வந்துகொண்டே இருக்கின்றன. இதைச் சீர்செய்ய வேண்டும்.

தூய்மையான நிர்வாகக் கட்டமைப்பு இந்து ஆலயங்களை நிர்வகிப்பவர்களிடம் ஏற்பட வேண்டும். இதற்குத் தக்க வழி காணவேண்டியது அவசியமாகும். எனவே கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் எமது ஆலய நிர்வாகிகளுக்கான நிர்வாகப் பயிற்சி வழங்கப்பட வேண்டும். பிறநாட்டில் வாழ்பவர்களின் நிதி உதவியோடு ஆலய நிர்வாகப் பயிற்சி நிலையம் விரைவில் உருவாக்கப்பட வேண்டும். எமது எதிர்காலச் சிறார்களை, எமது சமுதாயத்தைக்காப்பாற்ற ஆன்மீகச் சிந்தனை வளர்க்கப்பட வேண்டும். காலத்தின் தேவையாகக் கருதி இப்பணி உடன் ஆற்றப்பட வேண்டும் — என்றார்.

சிவத்தமிழ்ச் செல்வி தமது பதிலுரையில் தெரிவித்ததாவது:

இறைவனின் ஆசியாலும் பெரியவர்களின் வாழ்த்தாலும் எனது வாழ்வு பல பெருமைகளைச் சந்திக்கும் பேறு பெற்றது. எனது கல்வியோ, எனது செல்வமோ எனக்கு பெருமை தரவில்லை, சேவையே என் வாழ்வை உயர்த்தியது என்பது உண்மை. குறிப்பாக ஆலயப் பணி என் வாழ்வை வளப்படுத்தியது. யான் கற்பித்த கிறிஸ்தவ, இஸ்லாமியக் கல்லூரிகளில் யான் அரிய சில விடயங்களை கற்றுக் கொண்டேன். என் முன்னால் வழி நடத்திய பெரியவர்களிடம் ஆளுமையைக் கற்றுக் கொண்டேன், இவையாவும் கடந்த 33 வருடங்களாக ஆலயப் பணியில் என்னை வழிநடத்த உதவின. இன்று பெரியவர்கள் தந்த வாழ்த்தையும் ஆசியையும் நினைத்து நன்றி கூறி எதிர்காலத்தில் மேலும் பணியாற்ற அம்பாள்துணைபுரியப் பிரார்த்தித்து அமைகிறேன் — என்றார்.

விழாவில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக் குருக்கள், பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமிகள் சித்ரூபானந்தா, இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோரும் பேசினர்.

காலையில் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையைத் தொடர்ந்து சிவத்தமிழ்ச் செல்வி முதியோர் இல்லம், துர்க்கா துரந்தரி சைவத்தமிழ் ஆய்வு நூலகம் என்பன திறந்து வைக்கப்பட்டன.

பவளவிழாவில் வைத்து ''கந்தபுராணச் சொற்பொழிவு'' நூலின் இரண்டாம் பதிப்பை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் நா. சுப்பிரமணியஐயர் வெளியிட்டுஉரையாற்றினார்.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகள் பலவற்றில் இருந்தும் பாராட்டு வாழ்த்துக்கள் மற்றும் கேடயங்கள் பலவும் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் அபிநயப் பாட்டு நாட்டிய நாடகம் என்பனவும் இடம்பெற்றன.

(அ-86)

### வவுனியா வடக்கில்

# 41 பாடசாலைகள் அழிவுற்ற நிலையில்

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளின் போது வவுனியாவின் வடக்குப் பகுதியில் மாத்திரம் 41 பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டும், சேதமாக்கப்பட்டும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

'பி' தரப் பாடசாலைகளான நெடுங்கேணி மகாவித்தியாலயம், கனகராயன் மகாவித்தியாலயம், புளியங்குளம் இந்துக் கல்லூரி, சின்னப் பூவரசங்குளம் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம் ஆகியனவும் —

தரம் மூன்றைச் சேர்ந்த 37 பாடசாலைகளுமே அழிந்தும் சேதமாக்கப்பட்டும் காணப்படுகின்றன.

இந்தப் பாடசாலைகளில் முன்பு மொத்தம் 4 ஆயிரத்து 861 மாணவர்கள் நிரந்தரமாகக் கல்வி கற்று வந்தனர். தற்போது இப்பாடசாலைகள் வேறு பாடசாலைகளுடன் இணைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்ற போதிலும் மாணவர்கள் போதிய வசதி இன்றி ஓலைக் கொட்டில்களிலும் தரப்பாடங்கள் அற்ற நிலையில் பாய்களில் இருந்துமே தமது கல்வியைத் தொடர்கின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் அண்மையில் மேற்கொண்ட 'ஓயாத அலைகள்' நடவடிக்கையின் பின்னர் இப்பிரதேசம் அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளன.

(ஐ-க)

### கலந்துரையாடல்

பருத்தித்துறை, ஜன. 17

ஜி. சி. ஈ. உயர்தர வகுப்புக்களில் கற்பிக்கும் அதிபர்கள் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை புலோலி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் மாலை 2.00 மணிக்குப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தத் திட்டமைய இவ்வாண்டு நடைபெறவுள்ள பரீட்சை தொடர்பானவிவரங்கள்குறித்துவடமராட்சி கிழக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஈ. சிவானந்தம் கலந்து கொண்டு விளக்கமளிக்கவுள்ளார். எனவே 1ஏ, 1பி, 1சி பாடசாலைகளைச்சேர்ந்தஜி. சி. ஈ. உயர்தர வகுப்பு ஆசிரியர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார்.

(ஐ-118)

### நாளை

தை 04

செவ்வாய்க்கிழமை

திதி: துவாதசி

மாலை 6.03 வரை

நட்சத்திரம்: ரோகிணி

முற்பகல் 10.34 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 11.5—12.35

ராகுகாலம்: 3.35—5.05

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதய வாக்கு

அன்பின் விரிவே சுதந்திர விரிவு. உழைப்பாலேஉலர்ந்து பின்னிப் பொலிபவன் அன்பின் செல்வன். அன்பின் முடிவு இன்பதுன்பமல்லவே; அன்பின் முடிவு அன்பே தான்.

கவி தாகூர்

## விமானப் பயண அனுமதி வழங்கப்பட்டோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். குடாநாட்டில் இருந்து வெளிஇடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (இம் மாதம் 14 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

(118298ஏ), (127046ஏ),
(127380ஏ), (128864ஏ),
(128864பி), (128887ஏ),
(128887பி), (128887சி),
(128895ஏ), (128976ஏ),
(134394ஏ) (134414ஏ),
(134459ஏ), (134459பி)'
(134619ஏ), (134619பி),
(134619சி), (134619டி),
(134620ஏ), (134621ஏ),
(134720ஏ), (134860ஏ),

**சாவகச்சேரி**

(126362ஏ), (126375ஏ),
(126475ஏ). (126497ஏ),
(126497பி), (127874ஏ),
(127893ஏ), (127895ஏ),
(127895பி), (127895சி).
(127895டி), (127895ஈ),
(127897ஏ), (127897பி),
(127898ஏ), (127900ஏ),
(127900பி), )127910ஏ),
(127920ஏ), (127923ஏ),
(127927ஏ), (127927பி),
(127927சி), (127927டி),
(12.927ஈ), (127929ஏ),
(127930ஏ), (127930பி),
(127931ஏ,, (127931பி).
(127931சி), (127934ஏ),
(127934பி), (127936ஏ),
(127939ஏ), (127939பி),
(127939சி), (127940ஏ),
(127940பி), (127940சி),
(127960ஏ), (127961ஏ),
(127961பி), (127983ஏ),
(127984ஏ), (127985ஏ),
(127985பி), (127987ஏ),
(127987பி), (127989ஏ).
(127990ஏ), (127998ஏ),
(128000ஏ), (128036ஏ),
(128045ஏ), (128045பி),
(128045சி), (128801ஏ),
(128820ஏ), (128820பி),

**கரவெட்டி**

(127532ஏ), (127532பி),
(127532சி), (127582ஏ),
(127582பி), (127584ஏ),
(127587ஏ), (127749ஏ),
(127749பி), (127749சி),
(127749டி), (127749ஈ),
(127760ஏ), (129431ஏ),
(129431பி), (129431சி),
(129463ஏ), (129463பி),
(129642ஏ), (129642பி),
(132683ஏ), (132683பி),
(132737ஏ), (132886ஏ),
(132886பி), (132886சி),
(132937ஏ), (132937பி),
(132937சி), (132937டி).

**நல்லூர்**

(124937ஏ), (124973பி),
(124974ஏ), (124974பி),
(124974சி), (124974டி),
(125071ஏ), (129339ஏ),
(134692ஏ), (134672ஏ),
(134714ஏ), (134714பி),
(134749பி), (134816ஏ),
(134828ஏ), (134833ஏ),
(134833பி), (134833சி),
(134853ஏ), (134856ஏ).

**பருத்தித்துறை**

(125696ஏ), (125696பி),
(125696சி), (125925ஏ),
(125925பி,) (125926ஏ),
(125926பி), (125926சி),
(125926டி), (127666ஏ).
(127666பி), (127666சி),
(127732ஏ), (127732பி),
(127732சி), (127732டி),
(129426ஏ), (129426பி),
(134983ஏ), (134983பி).

**சண்டிலிப்பாய்**

(123622ஏ), (123623ஏ),
(124966ஏ), (124967ஏ),
(125192ஏ), (125192பி),
(127015ஏ), (127015பி),
(127320ஏ), (127320பி),
(127397ஏ), (127397பி),
(127432ஏ), (129306ஏ),
(134476ஏ), (134476பி),
(134576ஏ), (134576பி),
(134576சி) (134577ஏ),
(134578ஏ).
(134616ஏ), (134617ஏ).
(134617பி), (134617சி),
(134635ஏ), (134635பி),
(134702ஏ), (134737ஏ),
(134737பி), (134737சி),
(134743ஏ), (134752ஏ),
(134752பி), (134775ஏ),
(134819ஏ), (134819பி),
(134823ஏ).

**தெல்லிப்பழை**

(127258ஏ), (127258பி),
(127258சி), (129091ஏ),
(129091பி), (129091சி),
(129321ஏ), (134398ஏ),
(134414பி), (134436ஏ),
(134648ஏ), (134827ஏ),
(134827பி).

**உடுவில்**

(123426ஏ), (125026ஏ),
(125026பி), (127173ஏ),
(127173பி), (127472ஏ),
(128889ஏ), (128889பி),
(128900ஏ), (128900பி),
(128900சி), (128915ஏ),
(128915பி), (128933ஏ),
(134664ஏ), (134664பி),
(134664சி).

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் [இம் மாதம் 15 ஆம் திகதி வரை] பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

**நெடுந்தீவு**

(12612ஏ), (12686ஏ).

**யாழ்ப்பாணம்**

(122885ஏ), (124913ஏ),
(124913பி), (124913சி),
(126514ஏ), (126809ஏ),
(128365ஏ), (128365பி),
(128410ஏ), (128433ஏ).
(128433பி), (123434ஏ),
(128437ஏ), (128437பி),
(128448ஏ), (128453ஏ),
(128453பி), (128453சி),
(128453டி), (128453ஈ),
(128455ஏ), (128455பி),
(128445சி), (128482ஏ),
(128487ஏ), (128496ஏ),
(128512ஏ), (128512பி),
(128527ஏ), (128536ஏ),
(128548ஏ), (128548பி),
(128553ஏ), (128554ஏ),
(128557ஏ), (128557பி),
(128582ஏ), (128591ஏ),
(128599ஏ), (128620ஏ),
(128623ஏ), (128629ஏ),
[128629பி], [128635ஏ],
[128635பி], [128640ஏ],
[128648ஏ], [128648பி],
[128653ஏ!, [128653பி].
(128653சி), (128653டி),
(128687ஏ), (128698ஏ),
(128711ஏ), (128711பி),
(128714ஏ), (128714பி),
(128714சி), (128714டி).
(128804ஏ), (128812ஏ),
(128816ஏ), (128816பி),
(128825ஏ), (128832ஏ),
(128840ஏ), (128859ஏ),
(133336ஏ), (133336பி),
(133395ஏ), (133395பி),
(133407ஏ), (133481ஏ),
(133514ஏ), (133514பி),
(133536ஏ), (133536பி),
(133548ஏ), (133549ஏ),
(133549பி), (133540சி),
(133549டி), (133556ஏ),
(133556பி), (133617ஏ),
(133688ஏ), (133725ஏ),
(133725பி), (133725சி),
(133725டி), (133725ஈ),
(133725ஏவ்), (133741ஏ),
(133799ஏ).

**ஊர்காவற்றுறை**

(11932ஏ), (12435ஏ),
(12568ஏ), (12568பி),
(12568சி), (12641ஏ),
(12641பி), (12646ஏ),
(12647ஏ), (12656ஏ),
(12656பி), (12692ஏ),
(12692பி), (12692சி),
(12697ஏ).

**கோப்பாய்**

(128520ஏ).

**நல்லூர்**

(126548ஏ), (128510ஏ),
(128510பி), (128592ஏ),
(128592பி), (128609ஏ),
(128609பி), (133483ஏ),
(133483பி), (133787ஏ).

**வேலணை**

(12400ஏ), (12554ஏ),
(12621ஏ), (12621பி),
(12658ஏ), (12659ஏ),
(12662ஏ), (12662பி),
(12676ஏ), (12690ஏ),
(12693ஏ), (12701ஏ),
(12701பி), (12702ஏ),
(12702பி), (12703ஏ).

# மக்கள் வெளியேறிய இடங்களில் பரவலாக அதிகரிக்கும் திருட்டுகள்

அரியாலை, ஜன. 17

கொழும்புத்துறை மற்றும் நகரை அண்டிய கரையோரப் பகுதிகளில் மக்கள் வெளியேறிய இடங்களில் உள்ள வீடுகளில் நாளாந்தம் திருட்டுக்கள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முற்றாக இடம்பெயர்ந்து வெளிஇடங்களுக்குச் சென்றோரின் வீடுகளிலும், வீட்டு வளவுகளிலும் கண்டபடி பொருள்கள் அபகரிக்கப்படுவதாக மக்கள்| கவலை தெரிவித்துள்ளனர்.

சிலர் இரவில் மட்டும் பாது காப்பான இடங்களில் தங்கி விட்டுப் பகலில் வீடுகளுக்குத் திரும்புகின்றனர். அவ்வாறு காலையில் வீடுகளுக்குத் திரும்புவோர் வீடுகளில் பல பொருள்கள் மறைந்து விட்டிருப்பதைக் கண்டு வேதனையுறுகின்றனர்.

கொழும்புத்துறை கிழக்கு நெடுங்குளம், ஆனந்தன் வடலி, துண்டி, வளன்புரம் போன்ற பகுதிகளில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்ததைப் பயன்படுத்தி திருடர் கோஷ்டியினர் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

பட்டப்பகலில் வீடு பார்க்கச் செல்வது போன்று மக்கள் குடியிருக்காத வீடுகளை உடைத்து அங்குள்ள பெறுமதி வாய்ந்த பொருள்களை மிகவும் தந்திரமாககளவாடிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்தோர் வீடுகளில் விட்டுவந்த ஆடு, மாடு மற்றும் கோழி என்பன தினமும் காணாமற் போய்விடுவதாக கால்நடை வளர்ப்போர் கவலை தெரிவித்தனர்.

(ஐ-17)

## கண்காட்சி

நெடுந்தீவு மேற்கு சைவப் பிரகாச வித்தியாசாலையில் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்ப பிரிவுக்கான கண்காட்சி நடைபெறும்.

(ஐ-111)

## இடம்பெயர்ந்தோருக்குப் பாடசாலை உபகரணங்கள்

நெல்லியடி, ஜன. 17

அண்மையில் ஆரம்பிக்கப் பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகளினால் வடமராட்சி கிழக்கிலிருந்து அகதிகளாக வெளியேறி மாமுனை, செம்பியன்பற்று பகுதிகளில் வசித்து வரும் கடற்றொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இன்று திங்கள் காலை பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்படவிருக்கின்றன.

வடமராட்சி கிழக்கிலுள்ள வத்திராயன், மருதங்கேணி, உடுத்துறை ஆகிய இடங்களிலிருந்து வெளியேறியவர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களான அப்பியாசக் கொப்பிகள், பேனா, பென்சில் போன்றவைகளை வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வழங்க முன் வந்துள்ளது. மாமுனை சனசமூக நிலையத்தில் வைத்து மருதங்கேணி பிதவி அரசாங்க அதிபர் *வி. வேலாயுதபிள்ளை பொருள்களை வழங்குவார்.

(ஐ-109)

## சந்தையைப் புனரமைக்கக் கோரிக்கை

மானிப்பாய் பட்டின பொதுச்சந்தையை மீளப் புனரமைத்துத் தருமாறு மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவரைக் கடித மூலம் கேட்டுள்ளார்.

உலக வங்கி நிதியுதவியுடன் மேற்படி சந்தையை 20 லட்சம் ரூபா செலவில் மீளப் புனரமைத்துத் தருமாறு தலைவர் வெவிச்சோர் அன்ரன் ஜோன்சன் கேட்டுள்ளார்.

(ஐ-185)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 09 — 03 — 1948

மறைவு 16 — 12 — 1999

**திருமதி விசாலாட்சி சிதம்பரநாதன்**

உருண்டதோ ஒரு மாதம்,
மறையவில்லை எம் கவலை!
காலன் என்னும் வேடன் அம்பு
பட்டதோ. எங்கள் அம்மாவிற்கு!
எமக்கு துன்பமென்றால் துடிக்கும் அம்மா
எம்மை ஏன் கண்ணீர்க் கடலில் மூழ்க விட்டாய்?
எல்லாவற்றையும் உதறிவிட்டு
சுவடு தெரியாத இடம் சென்ற
எங்கள் அம்மாவே! உமை எப்போ காண்போம்?
விரைவாக வந்து எமக்கு ஆறுதல்
வழங்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.
சாந்தி!

குடும்பத்தினர்.

நீண்டியம்பற்றை,
புலோலி வடகிழக்கு.

[கி/10650]

## 31 ஆம் நாள் நீங்காத நினைவஞ்சலியும் திருப்பலி அழைப்பும்



**அமரர் ஜோசப் றிச்சேட்**

(முன்னாள் உரிமையாளர், றிச்சேட் பெயின்ரிங் வேக்ஸ் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.)

அன்பின் திரு உருவே அப்பா — நீர்
அமரராகி ஒரு திங்கள் வேகமாய்க் கடந்ததே
ஆயினும் அனைவர் வாயிலும் நீர் பப்பா என்று
ஆசையாய் அழைக்கப்பட்ட நாள்கள் இனி வந்திடுமா?
நீர் நல் கணவனாக நல் தந்தையாக
நீட்டிய கரங்களுக்கு நிம்மதி தருபவராக
எல்லோர்க்கும் இனியனாய்
நல்லோர்க்குத் தலைவனாய்
நானிலத்தில் நீர் வாழ்ந்த வாழ்வை
நாவினால் எடுத்தியம்பும் வேளை
கண்களை கண்ணீர்த் திரை மறைக்கின்றதே
காலம் தோறும் கை எடுப்போம் வல்ல
இறையோனிடம்
நல்ல முறையில் ஆறுதல் அடைய வேண்டி
நிற்கின்றோம்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (17-01-2000) புனித திரேசாள் ஆலயத்தில் காலை 11.15 மணிக்கு (பு.நே) திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படும்.

**தாய், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள் உற்றார், உறவினர், நண்பர்கள்.**

இல. 19, றக்கா வீதி,
சுண்டுக்குளி.
யாழ்ப்பாணம்.

(72745)

# 'பட பட'வென வெடிச்சத்தம் கேட்டதும் மோ. சைக்கிளில் இருந்து வீழ்ந்தார்

## நகரசபைத் தலைவரின் மரணவிசாரணையில் சாட்சியம்

நெல்லியடி, ஜன.17

''பட, பட'' என வெடிச் சத்தம் கேட்டசமயம், அதன் ஒளியை நான் கண்டேன், அவ்வேளை நகரசபைத் தலைவர் ஒன்றும் பேசாது மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே விழுந்தார்''.

இவ்வாறு கடந்த வெள்ளிக்கிழமை இரவு பருத்தித்துறை நகரசபை அலுவலகத்திற்கு முன்னால் பிஸ்டல் குழுவினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வ. விஜயரட்ணம் மற்றும் அலுவலக உதவியாளர் மு. பகீரதன் ஆகியோரது மரண விசாரணையின் போது சாட்சியமளித்த பருத்தித்துறை நகரசபையின் உழவுயந்திரச் சாரதியான புலோலி மேற்கு பண்டாரி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த ஆறுமுகம் உதயசூரியன் (வயது 39) தெரிவித்தார்.

இம்மரண விசாரணை நேற்று முன்தினம் சனிக்கிழமை மந்திகை மருத்துவமனையில் பருத்தித்துறை மாவட்ட பதில் நீதிவான் சு. பா. சுப்பிரமணியம் முன்னிலையில் நடைபெற்றது.

மிகவும் அதிர்ச்சியடைந்த நிலையில் காணப்பட்ட அவர் அங்கு தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது —

சம்பவதினம் மாலை 6.30 மணியளவில் நகரசபைத் தலைவர் என்னை நெல்லியடிக்குச் சென்று வீடியோ கசெற் வாங்கி வரும்படி கூறினார். அதனையடுத்து நான் நெல்லியடிக்குச் சென்று வீடியோ கசெற்றை வாங்கிக் கொண்டு பருத்தித்துறைக்கு வந்து அதனை தலைவரிடம் கொடுத்தேன்.

அப்போது மெக்கானிக் ஒருவரைக் கூட்டி வருமாறு சொன்னார். நான் அவரிடம் போய்விட்டு திரும்பிவரும்வழியில் (மெத்தைக்கடைச் சந்திக்கு அருகில்) நகரசபைத் தலைவரும் பகீரதனும் சைக்கிளில் வந்தனர்.

தலைவரின் மோட்டார் சைக்கிளை நான் எடுத்துச் சென்றதனால் அதனை அப்பகுதியில் வைத்து அவரிடம் கையளித்துவிட்டு அவர்கள் இருவரும் வந்த சைக்கிளை நான் பெற்றுக்கொண்டேன்.

சம்பவதினத்தன்று மின் சாரசபையின் மின் விநியோகம் இன்மையால் எங்கும் ஒரே இருளாக இருந்தது. தலைவரும் பகீரதனும் அந்த மோட்டார் சைக்கிளில் நகரசபையை நோக்கிச் செல்கையில் அந்த வெளிச்சத்தில் எனது சைக்கிளையும் செலுத்திக்கொண்டு நானும் சென்றேன்.

அவர்கள் இருவரும் நகரசபை வாசல் பகுதியில் தமது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு இறங்க முற்படுகையில் நான் சைக்கிளை நிறுத்தி அதன் ஸ்ராண்டை தட்டிய போது ''பட பட'' என வேட்டு ஒலி கேட்டது. அப்போது அந்த வெளிச்சத்தை நான் கண்டேன்.

அந்த நேரம் மோட்டார் சைக்கிளிலிருந்த நகரசபைத் தலைவர் ஒன்றும் பேசாது கீழே வீழ்ந்தார். தலைவருடன் மோட்டார் சைக்கிளிலிருந்த அலுவலக உதவியாளரான பகீரதனும் ''ஐயோ எரியுது ... ஐயோ... எரியுது'' என்று கூறியவாறு கீழே வீழ்ந்து குழறினார்.

நான் அப்பகுதியில் பார்த்த வேளை எவரும் இல்லாதமையால் உடனே தலைவர் வீட்டுக்குச் சென்று தெரிவித்துவிட்டு அவர்களுடன் சேர்ந்து சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து இருவரையும் மந்திகை மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம் — என்றும் தெரிவித்தார்.

### சுவாசப்பை கிழிந்த நிலையில் இருந்தது

நகரசபைத் தலைவரது சடலத்தை பிரேத பரிசோதனை செய்த பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும்பெருமாள் தெரிவிக்கையில் —

இறந்த விஜயரட்ணத்தின் உடலில் இடது கை தோளில் ஒரு காயமும், தோள்பட்டையில் இரு காயமும், இடது கன்னத்தில் ஒரு காயமும் இருந்தன. அவரது சுவாசப்பை வேட்டுக்களின் போது கிழிந்திருந்தது. அதில் நான்கு காயங்கள் காணப்பட்டன. இடது கை தோள் மூட்டில் மட்டும் 9 மில்லி மீற்றர் பிஸ்டல் குண்டு மீட்கப்பட்டது. பகீரதனுக்கு நெஞ்சில் மட்டும் ஒரு காயம் இருந்தது என்று தெரிவித்தார்

இம்மரண விசாரணையின் போது பருத்தித்துறை நகரசபை உறுப்பினரான திருமதி ஜெகதாஸன் யோகேஸ்வரி (வயது 30) நகரசபை காவலாளி எஸ். ராகவன் (வயது 30) ஆகியோர் சாட்சியமளித்தனர்.

பருத்தித்துறை பொலீஸ் நிலைய குற்றத் தடுப்பு பொலீஸ் இன்ஸ்பெக்டர் எஸ் கம கே சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

இதனையடுத்து இவர்கள் இருவரது மரணமும் கொலை என பதில் நீதிவான் தீர்ப்பளித்தார். (ஐ-109)

# நகரசபைத் தலைவரின் கொலைக்குக் கண்டனம்

## ஈ. பி. டி. பி. அறிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 17

பருத்தித்துறை நகரசபையின் தலைவர் வடிவேல் விஜயரட்ணமும், சபைஊழியரான முதலி பகீரதனும் படுகொலை செய்யப்பட்டிருப்பதை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளர் வீ.கே. ஜெகன் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறான படுகொலைகளால் ஜனநாயகத்தை அழித்தொழித்துவிட முடியும் என்று நினைப்பது பகற்கனவே. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொலை செய்வதன் மூலம் தமது கொலை வெறியை நிரூபித்து வருகின்றனர். புத்தாயிரமாண்டில் சமாதானத்துக்காக அனைவரும் பாடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையில் இப்படியான கொலைகளைச் செய்து மக்களை அதிருப்தி அடையச் செய்வது வெட்கப்படக்கூடிய ஒன்றாகும் — என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஐ)

# நெருப்புக்குச்சி மருந்தில் வெடி அடித்த மூவர் காயம்!

## ஒருவரின் விரல் துண்டிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

நெருப்புக்குச்சி மருந்தில் வெடி அடித்து விளையாடிய மூன்று சிறுவர்கள் படுகாயமடைந்தனர்.

பொங்கல் தினமான நேற்று முன்தினம் வெவ்வேறு இடங்களில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில், உடுவில் கிழக்கு, இணுவில் பகுதியில் அரியநாயகம் தஜீதாஸ் (வயது 14) என்பவர் வலதுகையின் மூன்று விரல்கள் (நடுவிரல்கள்) சிதறுண்டு காயமடைந்தார்.

கோண்டாவில் மேற்கில் வடிவேலு கிருபாகரன் (வயது 13) என்பவர் வலதுகையின் விரல்கள், உள்ளங்கை ஆகியவற்றில் சிதறல் காயங்களுக்குள்ளானார்.

வட்டுக்கோட்டை பிளவத்தைப் பகுதியில் குணநாயகம் குகதீஸ்வரன் (வயது 15) என்பவர், இடது கைநடுவிரல் துண்டிக்கப்பட்டு, பெருவிரலின் கீழ்ப் பகுதியிலும் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த மூவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

# ஜனாதிபதி...

(2 ஆம் பக்கத் தொடர்)

செய்யப்பட்டதும் அவர் எதிர்க்கட்சியினருடன் இணக்கப்பாட்டுடன் அணுகியமையும் பயங்கரவாதத்தை வேருடன் பிடுங்கி எறிய அரசுக்கு அனுசரணை வழங்குமாறு அனைத்துக் கட்சிகளுக்கும் கோரிக்கை விட்டமையும் பரவலாக பெருவாரியானபொது மக்களின் பாராட்டைப் பெற்றது. இதன் மூலம் இலங்கை அரசியல் வரலாற்றிலே புதியதோர் அத்தியாயம் தோற்றப்பட்டு விட்டதாக வே தென்பட்டது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக பரபரப்பான அரசியல் சூழ்நிலையிலே, சட்டத்தை தம்வசப்படுத்திக் கொள்ள தீயசக்திகள் துடிக்கும் இந்த வேளையிலே ஜனாதிபதி கடுமையான விமர்சனங்களை வெளியிட முற்பட்டிருக்கிறார்.

சுதந்திர ஊடகம் மட்டுமல்லாது முழுநாட்டு மக்களும் ஏக்கத்துடன் எதிர்பார்த்த தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டுக்காக மிக அழகாகவும் ஆழமாகவும் எடுப்பாகவும் ஜனாதிபதி முன்னர் கருத்து வெளியிட்டிருந்தார். ஆனால் தற்போதைய அவரது கருத்துக்கள் பயன்தரக்கூடியதாக அமையவில்லை — என்றுள்ளது. (இ-க-3)

# சுகாதாரப் பணிமனை கோப்பாயில் திறப்பு

புதிதாக அமைக்கப்பட்ட கோப்பாய் சுகாதார அதிகாரி பணிமனை எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

10 லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக் கட்டடத்தின் வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

தற்போது கோப்பாய் — மானிப்பாய் வீதியில் நீர்வேலி கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் இயங்கிவரும் இந்த சுகாதார அதிகாரி பணிமனைபுதிய கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## மாதர் மாணிக்கம்

ஏழாலை தெற்கு நாக்கியம்புலத்தைச் சேர்ந்த மாதர் மாணிக்கம் 16—01—2000 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் மாதர்—பொன்னம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வரும் இராசு அவர்களின் அன்புக் கணவரும் பாஸ்கரா, சௌந்தர்ராஜன் (சுவிஸ்), கருணாராஜா (பிரான்ஸ்), விஜயராஜா (சுவிஸ்), செல்வராஜா (ஜேர்மனி), தயாபரன் (சுவிஸ்), பிரதாபன் (சிற்றி பெயின்ற் ஹவுஸ், சுன்னாகம்), கிருஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிதம்பரசிங்கம் (தெ. ப. கூ.), மாலினி (சுவிஸ்), நந்தினி (பிரான்ஸ்), றஜனி (சுவிஸ்), ஜீவராணி (ஜேர்மனி), கலாதேவி (சுவிஸ்), இலங்கேஸ்வரன் (சுவிஸ்), தர்சினி (ஆசிரியை, ஏழாலை மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சுமதி, சுபாஜினி, சுகிர்தா, பவானி, கவிதா, சரிதா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-1-2000) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நண்பகல் 12-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
பிரதாபன் (மகன்)
(சிற்றி பெயின்ற் ஹவுஸ்,
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்)

ஏழாலை தெற்கு, நாக்கியம்புலம்,
சுன்னாகம். (72759)

## திருமதி புவனேஸ்வரி கதிரவேலு

(புவனம்)

விமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி கதிரவேலு 14-01-2000 வெள்ளிக்கிழமையன்று பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை கதிரவேலு (குணசிங்கம் – இளைப்பாறிய அரசாங்க லிகிதர், கச்சேரி-யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், றஜீவன் (லண்டன்), யசோதன் (பிரான்ஸ்), யசோதா (பிரான்ஸ்), றஜிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வி தனலக்ஷ்மி, திருமதி சிவகுருநாதன் ராஜலக்ஷ்மி (இளைப்பாறிய ஆசிரியை, விவேகானந்தா கல்லூரி - கொழும்பு), திருமதி மகேஸ்வரி மகாலிங்கம், மகேஸ்வரன், இராஜேஸ்வரன், திருமதி காந்திமதி குகசீலன் (டென்மார்க்), சுந்தரேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகேஸ்வரன் (மகேசன்)
இராஜேஸ்வரன் (இராசன்)
சுந்தரேஸ்வரன் (வரன்)

முத்தட்டிமட லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (72761)

## டாக்டர் ஆழ்வாப்பிள்ளை சிவசிதம்பரம்

[illegible] பெரிய தோட்டம், கரவெட்டியைப் புகுந்த இடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் ஆழ்வாப்பிள்ளை சிவசிதம்பரம் 14 - 01 - 2000 வெள்ளிக்கிழமை கனடாவில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் ஸ்ரீ[illegible]யின் அன்புக்கணவரும், கணேசன், ஜெனனி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஆழ்வாப்பிள்ளை - பாறுபதி (கலட்டி) தம்பதிகளின் அன்பு மகனும், சிவப்பிரகாசம் – செல்லம்மா தம்பதிகளின் (பெரிய தோட்டம், கரவெட்டி), மருமகனும், காலஞ்சென்ற சிவதாசன், திருச்சிற்றம்பலம், சரோஜினிதேவி, சிற்சபேசன் (முன்னாள் முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ். பல்கலைக்கழகம்) சரஸ்வதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேந்திரன், ஸ்ரீதரன், சிவராசா, சிவபாலன், ஜெயஸ்ரீ, பாலச்சந்திரன், மனோகரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17-01-2000) திங்கட்கிழமை காலை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ஆ. சரோஜினிதேவி
ஆ. சிற்சபேசன்
(சகோதரர்கள்)

கலட்டி,
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
T. P. 001 - 4165327431. (72739)

# தேடிக் கண்டுபிடிக்க முடியாதென அறிவிக்கப்பட்டவரின் எலும்புக்கூடே மீட்பு

## மல்லாகம் நீதிமன்றத்தில் தெரிவிப்பு

புன்னாலைக்கட்டுவன்,ஜன.17

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரினால் தேடிக்கண்டுபிடிக்க முடியாதவர் எனத் தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டவரின் எலும்புக்கூடே குப்பிளானில் மீட்கப்பட்டுள்ளது.

குப்பிளான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்துக்கு அருகே கண்டுபிடிக்கப்பட்ட இரு எலும்புக் கூடுகளில் ஒன்று அதே ஊரைச் சேர்ந்த தம்பிநாதர் அம்பிகைபாகனுடையது என அவரது மைத்துனரால் அடையாளம் காட்டப்பட்டிருந்தது தெரிந்ததே.

1995ஆம் ஆண்டு பிற்பகுதியில் காணாமற்போன இவர் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பிரஸ்தாப நபரை தேடிக் கண்டுபிடிக்க முடியாதுள்ளது என்று தெரிவித்து அவரின் உறவினர்களுக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

குப்பிளானில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான விவகாரம் மல்லாகம் நீதிமன்றத்தில் பதில் நீதிவான் எஸ்.சபாநாதன் முன் கடந்த வெள்ளிக்கிழமை எடுக்கப்பட்ட சமயம் மேற்கண்ட விவரம் தெரியவந்தது.

அன்று நீதிமன்றத்தில் பரமநாதன் சச்சிதானந்தன், கிருஷ்ணர் கதிரமலை, கிராமசேவையாளர் எஸ்.ஞானசபேசன் ஆகியோர் வாக்குமூலம் அளித்தனர். (இ-3-133)

ஜனாதிபதித் தேர்தலை அடுத்து

# இடமாற்றம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் வழக்கு தாக்கல்

அம்பாறை,ஜன.17

ஜனாதிபதித் தேர்தலை அடுத்து இடமாற்றம் செய்யப்பட்ட இரு ஆசிரியர்கள் மனித உரிமை மீறல் வழக்குகளை அம்பாறை மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

தமது இடமாற்றங்கள் சட்டவிரோதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதால் தமக்கு நீதி வழங்கவேண்டும் என்று அவ்விரு ஆசிரியர்களும் தமது மனுவில் கோரியுள்ளனர்.

அக்கரைப்பற்று, கல்முனை ஆகிய வலயங்களைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் ஜனாதிபதி தேர்தலின் பின் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டதால் அங்கு பெரும் பதற்ற நிலை நிலவுவதாகக் கூறப்பட்டது. (இ-3-7-14)

# பூவரசங்குளத்தில் கிளைமோர் தாக்கு!

## 9படையினர் பலி!

வவுனியா,ஜன.17

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் வாரிக்குட்டியூர் என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 9 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; 13 பேர் படுகாயமடைந்தனர்.

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள சாளம்பைக்குளம் என்ற இடத்திலிருந்து வாரிக்குட்டியூருக்குச் சென்றுகொண்டிருந்த இராணுவ ட்ரக் வண்டியே தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த பொதுமகன் ஒருவரும் உயிரிழந்தார். அடையாளம் காண்பதற்காக அவரது சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. நேற்று மாலை வரை சடலம் அடையாளம் காணப்படவில்லை.

காயமடைந்த படையினர் சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

சம்பவத்தை அடுத்துப் படையினர் அப்பகுதியில் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

### ஐ.தே.கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லோ, கேகாலைமாவட்ட எம்பி வின்சன்ட் பெரேரா ஆகியோரே அரசில் சேரவுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

ஐ.தே.க.வில் இருந்து நான்கு எம்பிக்கள் ஏற்கனவே அரசில் சேர்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(இ-3)

### கட்சித்தாவல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வியாழக்கிழமை 90 நிமிடங்கள் பேசியுள்ளார்.

இந்தப் பேச்சின்போது தமது முடிவை மறுபரிசீலனை செய்வதாக அஷ்ரப் உறுதிமொழி வழங்கினார் என்றும் -

அதற்காக அமைச்சரவையில் கூடுதல் அங்கத்துவம் உட்பட பல கோரிக்கைகளை நிபந்தனையாக அவர் விதித்துள்ளார் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் - இ.தொ.கா இந்தச் சட்டத் திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவது குறித்து நாளை கூடி ஆராயவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### களுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதிகள் உள்ளனர். அவர்கள் மத்தியில் பதற்றம் நிலவுகிறது.

தாக்குதலின் காயமடைந்த 15 கைதிகள் வெலிக்கடைச் சிறைச்சாலை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றனர். காயமடைந்தவர்களில் பலர் உரிய சிகிச்சை இன்றி சிறைச்சாலையில் உள்ளனர்.

அங்கு சம்பவம் நடந்த பின்னர் சிறைக்கூண்டுகளில் இருந்து தம்மை வெளியேசெல்ல அனுமதிப்பதில்லை என்று கைதிகள் தெரிவித்தனர்.

தம்மை வேறு பாதுகாப்பான சிறைகளுக்கு மாற்ற நடவடிக்கை எடுக்குமாறும் அவர்கள் என்னிடம் கோரினர் - என்றார் அவர்.

அதேநேரம் - களுத்துறையில் உள்ள கைதிகளில் 15 பேரின் உறவினர்கள் அங்கு செல்ல அன்று அனுமதி வழங்கப்பட்டிருந்தது. (இ-3)

### கால்கோள் விழா

புத்தூர் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய தரம் ஒன்று கால்கோள் விழாவும் பொங்கல் விழாவும் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் நா.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலைக் கல்வி அபிவிருத்திக்குழுத் தலைவர் இ.சிவஞானம் கலந்துகொள்வார். (ஐ-க)

### ஆஸி வெற்றி

மூன்று நாடுகள் பங்குகொள்ளும் 'கால்டன் அன் யுனைட்டட்' கிரிக்கெட் போட்டித்தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஆஸ்திரேலியஅணி பாகிஸ்தான் அணியை 6 விக்கெட்டுக்களால் வென்றது.

மழை காரணமாக 41 ஓவர்களாகக் குறைக்கப்பட்ட நேற்றைய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆட்டநேர இறுதியில் 9விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸி. அணி 38.5 ஓவர்களிலேயே வெற்றியை ஈட்டியது. (இ-8)

### நகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் என்ற பெயருடனான இந்தச் சுவரொட்டிகள் குருநகர், யாழ்.நகரத்தை அண்டிய பகுதிகள் ஆகியவற்றில் காணப்பட்டன. (இ-3-5)

### வன்னிக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் என்று அந்தப் பிரதேச அரச அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால்அனுப்பி வைக்கப்படும் உணவுப் பொருள்களைக் கொண்டு பெரும்பாலான மக்கள் ஒருநேர உணவையே உண்ண முடிகின்றது என்றும் - உணவுப்பொருள்களின் அளவைக் குறைத்தால் மக்கள் பெரும் கஷ்டத்தை அநுபவிக்க நேரிடும் என்றும் - முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.சுந்தரம் தெரிவித்தார். (இ-3)

# கேணல் கிட்டு நினைவுதினம் நேற்று வன்னியில் அனுஷ்டிப்பு

வவுனியா,ஜன.17

விடுதலைப்புலிகள் அமைப்பின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 பேரின் நினைவு தினம் நேற்று வன்னியிலும் கிழக்கிலும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

1993 ஆம் ஆண்டு கப்பலில் வரும் வழியில் வங்கக்கடலில் இந்தியப் படையினரால் முற்றுகையிடப்பட்ட சமயம் கேணல் கிட்டுவும் ஏனைய 9 பேரும் கப்பலைத் தகர்த்து உயிர் துறந்தனர்.

அவர்களது 7ஆண்டு நினைவு தினம் நேற்று ஆகும். வன்னியின் பல இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன. காலையில் எழுச்சி ஊர்வலங்களும் கூட்டங்களும் இடம்பெற்றன. மாலையில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

வீதிகள்,அலுவலகங்கள், பொது இடங்கள், பாடசாலைகள் வர்ணக் கொடிகளால்அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை -

கேணல் கிட்டு உட்பட ஏனையோரின் நினைவுதின நிகழ்வுகள் வெளி நாடுகள்பலவற்றிலும் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. (ஐ-க)

# அனலைதீவுக்கு மின்சாரம்

யாழ்ப்பாணம்,ஜன.17

அனலைதீவுப்பகுதிக்கு கடந்த வெள்ளிக்கிழமை முதல் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 7 இலட்சம் செலவில் மின்பிறப்பாக்கி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

அந்த அமைப்பின் அனலைதீவுப் பொறுப்பாளர் எஸ்.பிரதீபன் தலைமையில் நடந்த ஆரம்ப நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (இ-7)

### ஐ.தே.க.செயற்குழு இன்று கூடுகிறது

கட்சித்தாவலுக்கு வசதியாக அரசு கொண்டுவர உத்தேசித்துள்ள சட்டத்திருத்தம் தொடர்பாக ஆராய ஐ.தே.கவின் செயற்குழு இன்று கூடவிருக்கின்றது.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் இந்தச் சட்டத்திருத்தத்தின் சாதக பாதக நிலைகுறித்து விரிவாக ஆராயப்படவிருக்கின்றது.

### நேற்றையமுடிவுகள்

கொழும்பு,ஜன.17

19 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களில் பங்களாதேஷ் அணி ஹொலண்ட் அணியை 5 விக்கெட்டுக்களாலும் இந்திய அணி நியூஸிலாந்து அணியை 28 ஓட்டங்களாலும் நேபாள அணி கென்யா அணியை 14ஓட்டங்களாலும் வெற்றி பெற்றன.


புதிய பிரிவு

ஆரம்பம் . 20.01.2000

மு.ப . 10.00

OXFORD ENGLISH ACADEMY

சுப்பர்மடம்,

பருத்தித்துறை.

(72746)



நாளை....

A/L 2001

கட்டுப்பாட்டுக் கணக்கு

திரு. பாலவாசன்

ஆரம்பம்18. 01. 2000

6.20A.M

நல்லூர்

சயன்ஸ் அக்கடமி

குறிப்பு:- 150 மாணவர்கள் வரையே அனுமதிகள் வழங்கப்படும்.

(72760)



A/L 2002

சனி, ஞாயிறு:

கலைப்பிரிவு - 1

அனுமதிபெற்ற மாணவருக்கு

இந்து நாக -2.00p.m

திரு. M.R

LOGIC - 3.00p.m

திரு. S.S.மனோகரன்

தமிழ் - 4.00p.m

திரு. அருந்தா

புவியியல் - 5.00p.m

திரு. திருக்குமார்

சயன்ஸ் அக்கடமி நல்லூர்

கணித,விஞ்ஞானப்பிரிவு

இணைந்த கணிதம்

திரு. அம்பி

2002: புதன், வெள் - 6.30a.m

2001: திங், வியா - 6.30a.m

இரசாயனவியல்

திரு. அன்பு

2002: திங், வியா - 6.30a.m

2001: புதன், வெள் - 6.30a.m

(Inorganic Chemistry)

பௌதிகவியல்

திரு. கருணாநிதி

2002: சனி, ஞாயி - 6.30a.m

2001: சனி, ஞாயி - 7.30a.m

றூபா அக்கடமி

சயன்ஸ் அக்கடமி

தரம்: 5

புலமைப்பரிசில் பரீட்சை

BOND வினாத்தாள்

பிரதி ஞாயிறு 8.00மணிக்கு

(72736)



HITECH

College of Computer Studies

Y2K ஆண்டுக்கான

Royal Fellowship Examination

புலமைப் போட்டிப் பரீட்சை

இப்பரீட்சையின் மூலம் தேர்வாகி இங்கு பயிற்சி பெறும் மாணவர்களில் பயிற்சிக் காலத்தில் சிறந்து விளங்கும் 5 மாணவர்களுக்கு பிரித்தானியாப் பல்கலைக் கழகத்தில் (EASTERN UNIVERSITY, LONDON)பட்டப்படிப்புக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.




மேற்படி பயிற்சி நெறிகள் யாவும் February, September மாதங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இதற்கான விண்ணப்பப்படிவத்தை எமது நிறுவனத்திலோ அல்லது யாழ்நகரில் உள்ள பிரபல புத்தகசாலைகளிலோ பெற்றுக்கொள்ளலாம்.

Closing Date : 31/01/2000

DIRECTOR

V. Rajan B.E (Comp Sc. & Engg)

HITECH

Kulappitty Jn,

K.K.S Road,

Kokkuvil.

(72721)


## குருபாதமே துணை!

சுவாமி ஸ்ரீ சச்சிதானந்த செல்லம்மா அம்மையார் 16-01-2000 அன்று இரவு 8.05க்கு விதேக முத்தியடைந்துவிட்டார்.

சுவாமிகளின் சமாதி வைபவம் இன்று (17-01-2000) திங்கட்கிழமை நண்பகல் 1மணிக்கு கைதடியில் ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமத்தில் நடைபெறும்.

குரு அருள் பெற்று குவலயம் காண்மீ!

தகவல்:

அம்மையாரின் சிஷ்யன்

கு.கங்கைவேணியன்

ஸ்ரீ சச்சிதானந்த ஆச்சிரமம்,

கைதடி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17-01-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.